# இஸ்லாமிய சிந்தனை

ISLAMIC THOUGHT الفكر الإسلامي

ISSUE-142

இதழ் : 37
மலர் : 02




QUARTERLY RESEARCH JOURNAL OF JAMIAH NALEEMIAH
நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் என்ன செய்ய வேண்டும்?

நம்பிக்கை, கொள்கை, கோட்பாடுகளில் மிகவும் பலமானவர்களாக முஸ்லிம்களைப் பயிற்றுவிப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு நடத்தைகளில் உயர்ந்தவர்களாக, பண்பாடுள்ளவர்களாக, நாகரீகப் போக்கு கொண்டவர்களாக உருவாக்குவதில் எமது கவனம் குவிய வேண்டும்.

உண்மை, நீதி நேர்மை, வாக்குறுதி மீறாமை, ஒப்பந்தங்களை நிறைவேற்றல் இவை சமூக உறவுக்கான உயர்ந்த நடத்தைகள். அல்குர்ஆன் இவை பற்றிப் பலமுறை சொல்லியிருக்கிறது. ஹதீஸில் இது பற்றி விளக்கப்பட்டமை மிக அதிகம். உதவிபுரிதல், நன்மையை நிலைநாட்டப் பாடுபடுதல், தீமைகளை ஒழிக்க ஒத்துழைத்தல், நீதிக்காக உழைத்தல் என்பன இன்னொரு பக்கத்தால் முஸ்லிம்களின் அடிப்படைப் பண்புகளில் சில. இவற்றில் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. அல்குர்ஆனும், ஹதீஸும் திரும்பத் திரும்ப வலியுறுத்திய உண்மைகள் இவை.

உயர்ந்த ஒழுக்கங்களும், நல்ல பண்பாடுகளும் உலகப் பொது மொழி. அந்தப் பாஷை யாருக்கும் புரியும். எல்லோரையும் கவரும். இறைதூதை சமர்ப்பிக்க மிகச் சிறந் வழி இதுவே. இந்தப் பண்பாடுகளை வளர்த்தல், அதற்கான பயிற்சி முறைகள் பற்றி நாம் அதிகம் பேசுவதில்லை. வெளித் தோற்றங்கள் பற்றி அதிகமதிகம் பேசுவோம் கருத்து வேறுபட்டுக் கொள்வோம். இப்படியானவற்றைத் தவிர்ந்து சிந்தித்து உணர்ந்து செயலாற்ற முயற்சிப்போமாக!

- பெண்கள் சமூக வாழ்வும் உடையும் எனும் புத்தகத்தின் முன்னுரையிலிருந்து.

### முன்னட்டைப் படம்

**ஜாமிஆ நளீமிய்யாவின் கல்விசார் செயற்பாடுகளையும், சமூகப் பங்களிப்பையும் வரிவுபடுத்தும் நோக்கோடு அதன் ஒரு முக்கிய அங்கமாக 2007ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட (ADRT) நிறுவனத்தின் அழகிய தோற்றம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய சிந்தனை
ISLAMIC THOUGHT

மலர் : 37 இதழ் :02 2015 (142) ISSN 1391- 393X

QUARTERLY RESEARCH JOURNAL OF JAMIAH



அத்தியாயம் ஆல இம்ரான்–iii
– உஸ்தாத் அம்ரு காலித் 03

இழுக்கை ஏற்படுத்தும் அழுக்கு–ii
– அஷ்ஷெய்க் எச்.ஐ. கைருல் பஷர் 13

சமகால அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்
முன்னுரிமையும் பின்னணியும்
–அஷ்ஷெய்க் எம்.ஜே. எம் அரபாத் கரீம் 19

உடன்பாட்டுச் சிந்தனைக்கு வலுவூட்டும்
நம்பிக்கைக் கோட்பாடு – இறை நியதி
– அஷ்ஷெய்க் எச்.ஐ. கைருல் பஷர் 25

பிக்ஹைப் புரிதலின் பதப் பிரயோகங்களின்
வகிபாகம் –Vi
– அஷ்ஷெய்க் எம். நவாஸ் ஸஹ்ரூர்தீன் 33

பேராசிரியர் தாரிக் ரமழான்
சிந்தனைகளும், கருத்துக்களும்–4
அஷ்ஷெய்க் ஸகீ பவ்ஸ் 31



பிரதம ஆசிரியர்:
**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
Ph.D.(Edin)
பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா

**நிர்வாக ஆசிரியர்:**
**ஏ.பீ.எம். அப்பாஸ்**
(Naleemi) M.A (ind), PGDE

**வெளியீட்டு ஆலோசனைக் குழு:**
**ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
(Naleemi) B.A. Hons (Cey)
**ஸீ. ஐயூப் அலி**
(Naleemi) B.A. Hons (Cey) M.A.(Sudan)
**எச்.ஐ.எம். கைருஸ் பஷர்**
(Naleemi) B.A. Hons (Cey) M.A.(Sudan)
**எஸ்.எச்.எம். ஃபழீல்**
(Naleemi) B.A (Cey) M.A. (Cey)

**நிர்வாக உதவி, மற்றும்**
**கணனி வடிவமைப்பு:**
**எம்.ஆர்.எம். முஸம்மில்**

**அட்டை வடிவமைப்பு:**
**மௌலவி எச்.எம். நஸீர் (காஸிமி)**


| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூபா | 60.00 |
| தபால் மூலம் | ரூபா | 100.00 |
| ஒருவருட சந்தா | ரூபா | 400.00 |

| | |
|---|---|
| இந்தியா,பாகிஸ்தான்,மாலைதீவு | 700.00 |
| மலேசியா,மத்தியகிழக்கு நாடுகள | 750.00 |
| ஏனைய நாடுகள் | 800.00 |


**இச்சஞ்சிகையில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள கருத்துகளுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்**



The Manager, Naleemiah Bureau of Islamic Publications,
P.O. Box: 1, Beruwala.(12070) Sri Lanka.
T.P . 034 - 2276338 Tel/Fax : 034-2276339 E-mail: islamicthought@live.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புணர்வுடன் செயலாற்ற வேண்டியதன் அவசியம்

நாட்டின் அரசியலமைப்பு, தேர்தல் முறை, தேர்தல் தொகுதிகளின் மீள்வரைவு ஆகியன பற்றி மிகப் பரவலாக இன்று பேசப்படுகின்றது. இந்த மாற்றங்கள் பற்றிப் பேசும் அனைத்து கட்சிகளும், இம் மாற்றங்கள் சிறுபான்மை இனங்களையும், சிறுபான்மைக் கட்சிகளையும் பாதிக்காத வகையில் அமைதல் வேண்டும் என்ற ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பது மிகப் பாராட்டத்தக்க ஒரு நிலைப்பாடாகும். நாட்டின் எல்லா விவகாரங்களிலும் சிறுபான்மையினர் உள்வாங்கப்படல் வேண்டும், அவர்களது நலவுரிமைகள் பேணப்படல் வேண்டும் என்ற சிந்தனைப் போக்கு தேசிய ஒருமைப்பாட்டுக்கு மிக ஆரோக்கியமானதாகும்.

ஆனால் அதே நேரத்தில் பெரும்பான்மை மக்களின் இன உணர்வைத் தூண்டி வகுப்புவாத் தீயில் குளிர்காய முனையும் சில நாசகார சக்திகள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுவதையும் இவதானிக்க முடிகின்றது. வில்பத்து விவகாரம், பலாங்கொடை கூரகல விவகாரம் இத்தகைய முயற்சிகளின் வெளிப்பாடாகும்.

இத்தகைய சூழலில் முஸ்லிம் அரசியல் தலைமைகள், முஸ்லிம் ஆரசியல் கட்சிகள் மிக நிதானத்துடனும், எச்சரிக்கையுடனும் செயற்படுதல் அவசியமாகும். புதிய தேர்தல் முறை, தேர்தல் தொகுதிகளின் மீள் வரைவு பற்றி அரசாங்கத்தின் ஆலோசனைகளை மிக ஆழமாகப் படித்து, முஸ்லிம் சமூகததைப் பாதிக்கும் அம்சங்களை அடையாளப்படுத்தி, மாற்று யோசனைகளை முன்வைப்பதும், அவற்றை அனுசரித்து உள்ளடக்கி இம் மமாற்றங்கள் கொண்டுவரப் படுவதை உறுதி செய்யும் வகையில் செயல்படுவதும் முஸ்லிம் அரசியல் கட்சிகளினதும், தலைமைத்துவத் தினதும் முக்கிய கடமையாகும். இம் முயற்சி கட்சி வேறுபாடுகள், தனி மனித விருப்பு வெறுப்புகளைக் கடந்த நிலையில், சமூக நலனுக்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளப்படல் வேண்டும். இது போன்ற தற்போது நிலவுகின்ற இன ஒருமைப்பாடு, இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைப் பாதிக்கும் இனவாத சக்திகளின் செயல்பாடுகள் பற்றி மிக விழிப்பாக இருத்தலும் எச்சரிக்கையுடன் செயல்படுவதும் அவசியமாகும்.

– கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் ஆலு இம்ரான் -iii

உஸ்தாத் அம்ர் காலித்
பெயர்ப்பு : அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். அப்பாஸ் - நளீமி M.A.(ind),PGDE

## கொள்கையில் உறுதி:

இவ்வத்தியாயத்தை பிரதானமாக இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம் என முன்னரே குறிப்பிட்டிருந்தோம்:

(1) 1- 120ம் வசனங்கள் வரை: அஹ்லுல் கிதாப் பிரிவினரது நம்பிக்கை களைப் பற்றி இவ்வசனங்கள் பேசுகின் றன; உயரிய அமைப்பில், அறிவு பூர்வ மானதாக, பண்பாடானதாக அப்பேச்சு அமைந்துள்ளது. இவ்வாறு அவர்களது நம்பிக்கைகள் பற்றி பேசப்பட்டுள்ளமை அவை அறிவுக்கு ஏற்றவை அல்ல என விளக்கும் நோக்கிலல்ல. மாறாக முஸ்லிம் களை கொள்கை ரீதியாக உறுதிப்படுத் துவதே நோக்கமாக அமைந்துள்ளது; அவர்களது சிந்தனைகளை ஐயங்களிலி ருந்து தூய்மைப்படுத்துவதே இலக்காக இருக்கின்றது.

இவ்வுரையாடல் இடம்பெற்ற சூழலை நாம் ஆராய்ந்தால், மஸ்ஜிதுன் நபவியில் அது இடம் பெற்றிருப்பதைக் கண்டுகொள்ளலாம். நஜ்ரானில் இருந்து வந்த மூன்று நாட்கள் மஸ்ஜிதுன் நபவியில் தங்கியிருந்த குழுவினருடன் தான் இவ்வுரையாடல் இடம்பெற்றுள் ளது. முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக கும் இடையே இடம்பெற்ற இத்தகைய உரையாடல்களில் முதலாவது உரையா டலாகவும் அது அமைந்தது. இங்கு ஒரு விடயத்தை விளக்குவது மிகவும் முக்கியமானது. அதாவது பிற சமயத்தவர்களுடன் உரையாடுதல், பரஸ்பர புரிந்துணர்வை உருவாக்குதல் என்பதன் பொருள் எமது நம்பிக்கையின் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதல்ல அல்லது எமது கொள்கைகளில், பெறு மானங்களில் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதுமல்ல. இவ்வத்தியாயத்தில் இடம்பெற்றிருக்கும் உரையாடல், அவ்வுரையாடல் பிரித்து அமைக்கப்பட் டுள்ள விதம் என்பவற்றின் மூலம் இதனையே நாம் தெளிவாக உணர முடிகிறது.

## உரையாடலுக்கு முன் முஸ்லிம் களின் அகீதாவை பலப்படுத்தல்

அஹ்லுல் கிதாபிகளுடன் உரையா டலைத் துவங்க முன்னர் இவ்வத்தியா யம் முதலில் முஸ்லிம்களின் நம்பிக்கை யைப் பலப்படுத்துகிறது. ''வணக்கத்துக் குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதற்கு அல்லாஹ்வே சான்று பகர்கின்றான். மேலும், இந்த வல்லமை மிக்க நுண்ணறிவாளனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதற்கு வானவர்களும் அறிவுடையோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையிலும் நீதியிலும் நிலைத்த வண்ணம் சான்று பகர்கின்றனர்'' (3:18)

''திண்ணமாக, இஸ்லாம் மட்டுமே அல்லாஹ்விடம் (ஒப்புக்கொள்ளப் பட்ட) வாழ்க்கை நெறி ஆகும்'' (3:19)

''(நபியே, இனி) அவர்கள் உம்மோடு தர்க்கம் புரிந்தால், அவர்களிடம் 'நானும் என்னைப் பின்பற்றியவர்களும் அல்லாஹ்வின் முன் அடிபணிந்து விட்டோம்' என்று கூறுவீராக'' (3:20)

''இனி அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து நடக்கும் தீனை (வாழ்க்கை நெறியை) விட்டு வேறொரு வாழ்க்கை நெறியையா இவர்கள் விரும்புகின்றார்கள்? உண்மை என்னவெனில், வானங்கள், பூமி ஆகியவற்றில் உள்ள அனைத்தும் விரும்பியோ, விரும்பாமலோ அவனுக்கே கீழ்ப்படிந்து (முஸ்லிமாக) இருக்கின்றன'' (3:83)

''இவ்வாறு அவனுக்கு பணிந்து வாழும் நடத்தையை (இஸ்லாத்தை) விட்டு வேறொரு வாழ்க்கை நெறியை யாரேனும் மேற்கொள்ள விரும்பினால், அவனிடமிருந்து ஒருபோதும் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது'' (3:85)

## உடன்படும் இடங்களை உருவாக்குதல்

எந்தவொரு உரையாடலைத் துவங்க முன்னரும் இரு சாராரும உடன்பட முடியுமான இடங்களைக் கண்டறிவது அவசியமாகும். அதனையே அல்குர்ஆன் பின்வருமாறு விளக்கியுள்ளது:

''(நபியே!) நீர் கூறும் 'வேதம் அருளப் பட்டவர்களே, எங்களுக்கும் உங்களுக் கும் இடையிலுள்ள ஒரு பொதுவான விடயத்தின் பக்கம் வாருங்கள்: 'அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் நாம் அடிபணிய மாட்டோம். அவனோடு எதனையும் எவரையும் நாம் இணையாக்க மாட்டோம். மேலும் நம்மில் எவரும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் இறைவனாய் ஆக்கிக்கொள்ளக் கூடாது' அவர்கள் (இந்த அழைப்பினை) ஏற்க மறுப் பார்களேயானால், திண்ணமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள் என்று கூறிவிடுங்கள்'' (3:64)

இவ்வத்தியாயம் இரு சாராரும் ஏற்கத்தக்க பொதுவான ஒரு விடயம் என்ற ரீதியில் நபிமார்கள் அனைவரையும் விசுவாசித்தலைக் குறிப்பிட் டுள்ளது. அவர்களுள் அஹ்லுல் கிதாப் களுக்கு வந்த நபிமார்களும் உள்ளடங்கு கின்றனர் ''நீர் கூறுவீராக 'நாங்கள அல்லாஹ்வையும் எங்கள் மீது இறக்கியருளப்பட் டிருப்பவற்றையும் ஏற்றுக் கொண்டிருக் கின்றோம். மேலும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், ய:கூப், மற்றும் ய:கூபின் வழித்தோன்றல்கள் ஆகியோர் மீது இறக்கியருளப் பட்டவற்றையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இன்னும் மூஸா, ஈஸா மற்றுமுள்ள நபிமார்களுக்கு அவர்களுடைய அதிபதியிடமிருந்து இறக்கியருளப்பட்டவற்றையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இவர்களுக்கி டையே நாங்கள் எவ்வித வேற்றுமையும் காட்டுவதில்லை. மேலும், நாங்கள் அல்லாஹ்வுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கும் முஸ்லிம்களாக இருக்கின் றோம்.'' (3:84)

## ஆதாரங்களே வழி!

கொள்கையில் பலப்படுத்துவதற்கு ஆதாரங்களை முன்வைப்பதே அல்குர்ஆன் கையாண்ட வழிமுறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திண்ணமாக அல்லாஹ்விடத்தில் ஈஸாவின் உவமை ஆதத்தைப் போன்றதாகும். அல்லாஹ் அவரை மண்ணினால் படைத்தான். பிறகு 'ஆகுக' என்று கட்டளையிட்டான். உடனே அவர் ஆகிவிட்டார்.''(3:59)

''வேதம் அருளப்பட்டவர்களே! இப்ராஹீம் (உடைய தீனைப்) பற்றி ஏன் தர்க்கம் புரிகின்றீர்கள். அவருக்குப் பின்னர் தாம் தவ்ராத்தும் இன்ஜீலும் இறக்கியருளப்பட்டன. (இதனைக்கூட) நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா?'' (3:65)

''நீங்கள் எவற்றை அறிந்து வைத்திருக்கின்றீர்களோ, அவற்றில் நன்கு தர்க்கம் புரிந்து விட்டீர்கள். (இப்போது) நீங்கள் முற்றிலும் அறியாதவற்றில் தர்க்கம் புரிய ஏன் முற்படுகின்றீர்கள்?!'' (3:66)

''இப்ராஹீம் யூதராகவோ, கிறிஸ்தவராகவோ இருந்ததில்லை. மாறாக, அவர் ஒருமனப்பட்ட முஸ்லிமாக இருந்தார். மேலும் அவர் இறைவனுக்கு இணைவைப்போரில் ஒருவராய் எப்போதும் இருந்ததில்லை'' (3:67)

## ஆதாரபூர்வமாக திருப்தியடைதல்

மனிதனை அறிவுரீதியாக, தர்க்க ரீதியாக தன் கொள்கையில் திருப்தியடையச் செய்யும் அநேகமான வசனங்கள் இவ்வத்தியாயத்தில் காணப்படுகின்றன.

''ஒருவருக்கு அல்லாஹ் வேதத்தையும், இறை தூதுத்துவத்தையும் ஞானத்தையும் வழங்கியிருக்க அதனைப் பெற்ற பின்னர், 'நீங்கள் அல்லாஹ்வை விடுத்து எனக்கு அடிமைகளாகி விடுங்கள்' என்று மக்களிடம் கூறுவது அவருக்கு அனுமதிக்கப்பட்டதன்று. மாறாக, நீங்கள் ஓதிக்கொண்டும், கற்றுக் கொடுத்துக் கொண்டும் இருக்கும் வேத அறிவுரைகளின் தேட்டப்படி ரப்பானிகளாய்த் திகழுங்கள்' என்றே அவர் கூறுவார்'' 3:79)

''வானவர்களையோ, இறைதூதர்களையோ உங்கள் கடவுளர்களாய் ஆக்கிக் கொள்ளும்படி உங்களுக்கு ஒரு போதும் அவர் கட்டளையிட மாட்டார். நீங்கள் முற்றிலும் இறைவனுக்குப் பணிந்துவிட்ட பிறகு (முஸ்லிம்களாய்த் திகழும்போது) நிராகரிக்கும் போக்கை மேற்கொள்ளும்படி ஒரு நபி உங்களுக்குக் கட்டளையிடுவாரா? என்ன'' (3:80)'

## எச்சரிக்கை விடுத்தல்

ஏற்கனவே இடம்பெற்றுள்ள வசனங்கள் அறிவார்ந்த, பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களை முன்வைத்துள்ளன. தொடர்ந்து வரும் வசனங்கள் உரையாடலில் இன்னொரு பகுதியை நோக்கி நகர்கின்றன. நிராகரிப்பினால் வரும் விளைவுகளையிட்டு அவை எச்சரிக்கை செய்கின்றன; அச்சுறுத்தல் விடுக்கின்றன.

''வேதம் அருளப்பட்டவர்களே! நீங்கள் கண்கூடாகப் பார்த்துக கொண்டே அல்லாஹ்வின் சான்றுகளை ஏன் நிராகரிக்கின்றீர்கள்?'' (3:70)

''வேதம் அருளப்பட்டவர்களே! சத்தியத்தை அசத்தியத்தோடு கலந்து ஏன் அதனைச் சந்தேகத்துக்குரியதாய் ஆக்குகின்றீர்கள்? நீங்கள் நன்கு அறிந்து கொண்டே சத்தியத்தை ஏன் மறைக்கின்றீர்கள்?'' (3:71)

''ஆனால், ஐயமின்றி வரவிருக்கின்ற ஒரு நாளில் நாம் அவர்களை ஒன்று திரட்டும்போது அவர்களின் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவாகும்? அந்நாளில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் சம்பாதித்ததற்குரிய கூலி முழுமையாய் வழங்கப்படும். மேலும் யார் மீதும் அநீதி இழைக்கப் பட மாட்டாது" (3:25)

இவ்வாறு எச்சரித்துக் கொண்டு செல்லும் வசனங்கள் இறுதியில் சவால்விடும் நிலையை அடைகின்றன.

"இந்த அறிவு உம்மிடம் வந்த பின்பு யாரேனும் உம்மிடம் இவ்விவகாரத்தில் தர்க்கம் புரிந்தால் (நபியே, அவர்களிடம்) நீர் கூறும்: 'வாருங்கள்' உங்கள் மக்களையும் எங்கள் மக்களையும், உங்கள் பெண்களையும் எங்கள் பெண்களையும்- நாங்களும் நீங்களும்- அழைத்துக் கொண்டு பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்' என்று பணிந்து இறைஞ்சுவோம்" (3:61)

இவ்வசனம் சாபமிட்டுக் கொள்ளல் தொடர்பான வசனம் என அழைக்கப் படுகின்றது. அதாவது உரையாடலில் ஈடுபட்டுள்ள இரு சாராரும் ஒன்று சேர்வர்; சத்தியத்தில் இருக்கும் பிரிவினருக்கு உதவுமாறும், நிராகரிக்கும் பிரிவினருக்கு சாபத்தை ஏற்படுத்து மாறும் அவர்கள் இறைவனிடம் இறைஞ்சுவர். உண்மையில், உரையாடலில் ஈடுபட்டிருந்த நஜ்ரான் தூதுக் குழுவினர் இக்கடுமையான சவாலை ஏற்றுக் கொள்ளவில்லை.

**உரையாடலின் போது நீதியாக நடத்தலும் சமநிலை பேணலும்:**

இஸ்லாம் மிக உயர்ந்த ஒரு வாழ்க்கை நெறி. அந்த வகையில் இவ்வுரையாடலை முடிக்கின்றபோது அஹ்லுல் கிதாப்களில் சிலரிடம் காணப் பட்ட நல்லம்சங்களை அது எடுத்துரைத் துள்ளது. அவர்களைப் பற்றிய முஸ்லிம் களின் பார்வை நீதியானதாக அமைவதற்கு தேவையான தூண்டுதலை அளித்துள்ளது.

* வேதம் அருளப்பட்டவர்களில் சிலர் உள்ளனர், அவர்களை நம்பி நீர் ஒரு செல்வக் குவியலை ஒப்படைத் தாலும் உம்மிடம் அதனைத் திருப்பித் தந்துவிடுவார்கள். அவர்களில் இன்னும் சிலர் உள்ளனர், அவர்களை நம்பி ஒரு காசைக் கொடுத்தாலும் கூட நீர் அதற்காக விடாப்பிடியாய் நின்றாலே யொழிய அதனை உம்மிடம் திருப்பித் தரமாட்டார்கள்" (3:75)

'ஆனால், வேதம் அருளப்பட்டோர் அனைவரும் ஒரே மாதிரியானவர்களாய் இல்லை. அவர்களில் நேரிய வழியில் நிலைத்து நிற்கும் ஒரு குழுவினரும் இருக்கின்றனர். அவர்கள் இராக் காலங் களில் இறை வசனங்களை ஓதுகின்றனர். (அல்லாஹ்வின் முன்னிலையில்) ஸுஜூது- சிரம் தாழ்த்திப் பணிகின்றனர்" (3:113)

அல்குர்ஆன் இங்கு அவர்கள் முஸ்லிம்களாக இல்லை என்பதற்காக அவர்களது அனைத்து செயற்பாடுகளையும் பிழை என கூறவில்லை; அவர்களது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் அனைத்தும் மோசடியானவை என குறிப்பிடவில்லை.

முஸ்லிம்களே! முஸ்லிம் அல்லாத வர்களுடனான உறவின்போது சமநிலை பேண அத்தியாயம் ஆலு இம்ரானிட மிருந்து கற்றுக் கொள்ளுங்கள்!!

அல்குர்ஆன் அஹ்லுல் கிதாபிகளை நோக்கி வந்த நபிமார்களை புகழ்ந்துள்ள மையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திண்ணமாக அல்லாஹ அகிலத்தவர் களைக் காட்டிலும் (முன்னுரிமை வழங்கி தனது தூதுப் பணிக்காக) ஆதத்தையும் நூஹையும் இப்ராஹீமின் வழித் தோன்றல்களையும் இம்ரானின் வழித் தோன்றல்களையும் தேர்ந்தெடுத் துக் கொண்டான்'' (3:33)

அகிலத்து மாதர்கள் அனைவரிலும் சிறந்தவராக மர்யமைத் தெரிவு செய்தி ருப்பதாக அல்குர்ஆன் சிலாகித்துப் பேசுகிறது.

''மேலும் அந்த நேரம் வந்தபோது வானவர்கள் கூறினார்கள்: மர்யமே! திண்ணமாக அல்லாஹ் உன்னைத் தேர்ந்தெடுத்துத் தூய்மையாக்கினான் மேலும், அகிலத்துப் பெண்கள் அனைவ ரிலும் (உனக்கு முதலிடம் அளித்து, தனது திருப்பணிக்காக) உன்னைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்'' (3:42)

நீதியை நிலைநாட்டுவதில், சமநிலை பேணுவதில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அடிப்படை விதி இது. இவ் வசனம் நபி (ஸல்) அவர்களது மனைவியைப் பற்றியோ, புதல்வியைப் பற்றியோ பேசவில்லை. மாற்றமாக இவ்வசனம் இடம்பெற்றிருப்பது மர்யம் (அலை) அவர்களைப் புகழ்வதற்காகும். எத்தகைய அழகு இது!

### கண்மூடித்தனமான பின்பற்றல்

அஹ்லுல் கிதாப்- பிரிவினரது நம்பிக்கைகள் பற்றி விளக்கியதன் பின்னர் அவர்களைக் கண்மூடித்தன மாக பின்பற்றுவதையிட்டு எச்சரிக்கை விடுக்கின்றது.

''இறை நம்பிக்கை கொண்டவர் களே! வேதம் அருளப்பட்டவர்களில் ஒரு பிரிவினரின் கருத்துக்களை நீங்கள் ஏற்றுக்கொண்டால், அவர்கள் உங்க ளுடைய நம்பிக்கையிலிருந்து உங்களைப் பிறழச் செய்து இறை மறுப்பின்பால் உங்களைக் கொண்டுபோய் விடுவார் கள்'' (3:100)

''உங்களுக்கு அல்லாஹ்வின வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்படுகின்றன. மேலும் அவனுடைய தூதரும் உங்களிடையே இருக்கின்றார். அவ்வாறிருக்க, இறை மறுப்பின் பால் செல்ல உங்களுக்கு என்ன வாய்ப்பு இருக்கின்றது? யார் அல்லாஹ்வை இறுகப் பற்றிக் கொள்கின்றாரோ அவர் நேரான வழியினை நிச்சயம் பெற்றுக் கொள்வார்'' (3:101)

''அவர்களை நீங்கள் நேசிக்கின் றீர்கள்; ஆனால் அவர்கள் உங்களை நேசிப்பதில்லை. நீங்களோ எல்லா இறை வேதங்களின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்கள்! அவர்கள் உங்களைச் சந்திக்கும்போது நாங்களும் நம்புகிறோம் எனக் கூறுகின்றார்கள். ஆனால், அவர்கள் உங்களை விட்டுப் பிரிந்து சென்றதுமே, உங்கள் மீது மன எரிச்சல் கொண்டு தம் விரல் நுனிக ளைக் கடிக்கின்றார்கள்'' (3:119)

'' எவர்கள் தம்மிடம் தெளிவான அறிவுரைகள் வந்த பின்னர் தங்களுக் குள் கருத்து வேறுபாடு கொண்டு பற்பல பிரிவினராயச் சிதறுண்டு விட்டார்களோ அவர்களைப் போல் நீங்களும் ஆகிவிடாதீர்கள். அவர்களுக்கு மறுமை நாளில் மாபெரும் தண்டனை உண்டு'' (3:105)

இவ்வுரையாடலில் வசனங்கள் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளதை அவதானிக்கலாம். அஹ்லுல் கிதாப் புகழப்பட்டுள்ளனர்; ஆதாரபூர்வமாக அகீதா முன்வைக்கப்பட்டுள்ளது; இரு சாராரும் உடன்படும் இடங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன; பின்னர் அகீதாவைப் பலப்படுத்தும் வகையில் வசனங்கள் இடம்பெற்றுள்ளன. (79-83 வரையிலான வசனங்களில் இப்போக்கைத் தெளிவாக அவதானிக்கலாம்)

இவ்வுரையாடலின் நடுவே இம்ரானின் குடும்பத்தை நாம் மறந்துவிட முடியாது. பாக்கியம் பொருந்திய ஒரு குடும்பம் அது. அக்குடும்பத்தின் பெயர்தான் இவ்வத்தியாயத்தின் பெயராக ஆக்கப்பட்டுள்ளது. இம்ரானின் மனைவியிலிருந்து ஆரம்பித்து, அவரது பிரார்த்தனையிலிருந்து தொடங்கி மர்யம் (அலை) அவர்களது வரை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பின்னர் சகரிய்யா (அலை) அவர்களிலிருந்து தொடங்கி, அவர்களது பிரார்த்தனை முதல் ஈஸா (அலை) அவர்கள் வானுலகுக்கு உயர்த்தப்படும் வரையிலான விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அகிலத்தாரிலிருந்து அவர்கள் தெரிவு செய்யப்பட்டதனை, அவர்களது சிறப்பினை எடுத்துரைக்கும் அழகிய வசனங்களாக இவ் வசனங்கள் அமைந்து காணப்படுகின்றன.

## உறுதியாய் இரு!

இவ்வத்தியாயத்தின் முதலாம் பகுதி, ''ஆனால், நீங்கள் நிலைகுலையாமலும் அல்லாஹ்வுக்கு அஞ்சியும் வாழ்ந்தால், (உங்களுக்கெதிராக) அவர்கள் கையாளுகின்ற சூழ்ச்சி எந்தப் பயனையும் தரப்போவதில்லை'' (3:120) எனும் வசனத்துடன் முற்றுப் பெறுகின்றமையானது கொள்கையில் உறுதியாக இருக்குமாறு சூட்சுமமாக உணர்த்துவதாய் அமைந்துள்ளது.

அவ்வாறே, இவ்வத்தியாயத்தின் இரண்டாம் பகுதியும் கொள்கையில் உறுதியாக இருக்குமாறு கூறியே முடிவடைந்துள்ளது.

'' இறை நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையைக் கைக்கொள்வீர்களாக! அசத்தியவாதிகளுக்கு எதிரில் உறுதியாக நிலைத்து நிற்பீர்களாக (சத்தியத்திற்காக தொண்டு புரிய) எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருப்பீர்களாக! மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சியே வாழ்வீர்களாக! இதனால் நீங்கள் வெற்றியாளர்களாகத் திகழக் கூடும்'' (3:200)

## கொள்கையில் உறுதியும் நடத்தையில் உறுதியும்

வெளியிலிருந்து வரும் சிந்தனைகள், ஐயங்கள் என்பவற்றுக்கு முன்னால் உறுதியாக நிலைத்திருப்பதனை விளக்கிய அல்குர்ஆன், தொடர்ந்து முஸ்லிம் சமூகம் அதனது உள்ளக அமைப்பை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. உஹத் யுத்தம் பற்றி கருத்துத் தெரிவிப்பதன் மூலமாக இப்பணியை அது துவக்குகின்றது. இந்த யுத்தத்திலிருந்து தோல்வியைத் தழுவிய நிலையிலேயே முஸ்லிம்கள் வெளியேறியிருந்தனர். நபி (ஸல்) அவர்களது கட்டளைக்கு மாறு செய்வதையிட்டும், புறமுதுகு காட்டி ஓடுவதையிட்டும், நபி (ஸல்) அவர்களை யுத்த மைதானத்தில் அநாதரவாக விட்டுவிட்டுச் சென்றதையிட்டும் அவர்கள் வெட்கித்த நிலையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டனர். இந்தநிலையில் அல்குர்ஆன் அவர்களை அணுகிய விதம் மிக உயர்ந்ததாகக் காணப்பட்டது.

**1.அல்லாஹ்வின் அருட் கொடைகளை ஞாபகப்படுத்தல்;**

உதவி அல்லாஹ்வின் புறத்திலிருந்து வரும் என்பது எடுத்துரைக் கப்பட்டது. குறிப்பாக பத்ரில் அவர்கள் பெற்ற வெற்றி அவர்களுக்கு ஞாபகப் படுத்தப்பட்டது.

''உங்களில் இரு பிரிவினர் கோழைத் தனம் காட்ட முனைந்த நேரத்தை நினைவு கூரும். அல்லாஹ்வோ அவர்க ளுக்கு உதவி செய்ய இருந்தான்'' (3:122)

அதாவது அவர்கள் பின்வாங்காமல் அவர்களை உறுதிப்படுத்தியது இறைவன் தான் என இவ்வசனம் கூறுகிறது.

''(இதற்கு முன்) பத்ருப் போரில் அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்தி ருந்தான். அப்போது நீங்கள் மிகவும் வலுவற்றவர்களாய் இருந்தீர்கள்'' (3:123)

அதே தொடரில் மீளவும் வெற்றி அல்லாஹ்விடமிருந்தே வருகிறது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

''ஆம் நீங்கள் நிலை குலையாமலிருந்து இறைவனுக்கு அஞ்சிப் பணியாற்றினால் எந்தக் கணத்தில் பகைவர்கள் உங்கள் மீது படையெடுத்து வருகின்றார்களோ, அந்தக் கணத்தில் உங்கள் இறைவன் போர் அடையாளமுடைய ஐயாரிரம் வானவர்களின் மூலம் உங்களுக்கு உதவி செய்வான்'' (3:125)

பொறுமையும், தக்வாவும இவ்வத்தி யாயத்தின் இறுதியில் இணைத்துக் கூறப்பட்டுள்ளன என்பதை அவதானி யுங்கள். அவ்வாறே இவ்வசனத்திலும் வானவர்கள் இறங்கி வருவதற்கும், விசுவாசிகள் வெற்றி பெறுவதற்கும் காரணமாக பொறுமையும் தக்வாவுமே குறிப்பிடப்பட்டுள்ளன என்பது அவதானிக்கத் தக்கதாகும்.

**2. தவ்பா செய்யுமாறும், இறைவன் பால் மீளுமாறும் பணித்தல்:**

அல்குர்ஆன் மனிதனைப பண்படுத்த, பலப்படுத்த கையாண்டுள்ள இன்னொரு கவர்ச்சி மிகு வழிமுறையே இதுவாகும். மனிதர்களது தவறுகளைக் குறிப்பிட்டு அவர்களைக் கண்டிக்க முன்னர் இறைவன் பால் மீளுமாறு அவர்களை அழைக்கிறது அல் குர்ஆன்.

''இறைவனிடமிருந்து வழங்கப்படும் மன்னிப்பு மற்றும் சுவனத்தின் பக்கம் விரைந்து செல்லுங்கள்'' (3:133)

'''மேலும் அவர்கள் எத்தகையோர் எனில் மானக்கேடான செயலைச் செய்து விட்டால், அல்லது (ஏதேனும் பாவங்கள் செய்து) தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொண்டால், உடனே அவர்கள் அல்லாஹ்வை நினைத்து, தம் பாவங்களுக்காக அவனிடம் மன்னிப்புக் கோருவார்கள். (ஏனெனில்) அல்லாஹ் வைத் தவிர பாவங்களை மன்னித்தருள் பவன் வேறு யார்?! மேலும் தாம் செய்த வற்றில் அறிந்து கொண்டே பிடிவாத மாக இருக்கமாட்டார்கள்'' (3:135)

**3. ஆறுதல் கூறுதல்:**

ஸஹாபாக்களது மானசீகப் பலத்தை உயர்த்த அல்குர்ஆன் கையாண்ட வழி இது. எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்கள் வந்தபோதிலும், இடைஞ்சல்கள் நேர்ந்த போதிலும் கொள்கையில் உறுதியாக இருக்குமாறு இத்தகைய வசனங்கள் எல்லாக் காலத்திலும் வாழும், எல்லா இடங்களிலும் வாழும் முஸ்லிம்களைப் பணிக்கின்றன.

''நீங்கள் மனந் தளர்ந்து விடாதீர்கள். கவலையும் கொள்ளாதீர்கள், நீங்கள் இறை நம்பிக்கையுடையோராயின் நீங்களே மேலோங்குவீர்கள்" 3:139)

''(இப்பொழுது) உங்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளதென்றால், இதற்கு முன்னர் (உங்கள்) எதிரணியினருக்கும் இதே போன்ற காயம் ஏற்படத்தான் செய்தது. இவையெல்லாம் கால (த்தின் மாற்ற)ங்கள் ஆகும். இவற்றை மக்களிடையே நாம் மாறிமாறி வரச் செய்கின்றோம்" (3:140)

இங்கு அல்குர்ஆன் ஸஹாபாககளின் துயரங்களை பாசத்தோடு துடைத்து விடுகின்றது. நிராகரிப்பாளர்கள் உங்களைப் போன்றே துன்பத்துக்கு உள்ளானார்கள், உங்களைப் போன்றே உயிர்களை இழந்தார்கள் என அது கூறுகின்றது. அடுத்து கொள்கையில நிலைகுலையாது இருக்க வழிசெய்யும் அழகு வசனம் இடம் பெறுகிறது.

''உங்களில் யார் அவனுடைய பாதையில் முனைப்போடு போராடுபவர்கள் என்பதை அல்லாஹ் அறியாம லும், உங்களில் நிலைகுலையாமல் நிற்பவர்கள் யார் என்பதை அவன் அறியாமலும் நீங்கள் (எளிதில்) சுவனம் புகுந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டீர்களா? (3:142)

சுவனம் மிக விலை உயர்ந்தது. அதனைப் பெற விரும்புவோர் அதற்காகப் போராடுவது, அப் போராட்டப் பாதையில் உறுதியாக நிலைத்திருப்பது தவிர்க்க முடியாதது.

**4. இலகிய கண்டனம்:**

மானசீகப் பலத்தை உயர்த்தியதன் பின்னர் அவர்களை நோக்கி கண்டனம் விடுக்கப்படுகின்றது. மிருதுவான தொணியில் அக் கண்டனம அமைந்திருக்கின்றமை அவதானிக்கத் தக்கது.

''மரணம் உங்கள் எதிரில் வருவதற்கு முன்பு நீங்கள் நிச்சயமாக அதனை விரும்பிக் கொண்டிருந்தீர்கள். இதோ, இப்பொழுது அது உங்கள் முன் வந்து விட்டது! அதனை நீங்கள கண்கூடாய்ப் பார்த்து விட்டீர்கள்" (3:143)

''முஹம்மத் ஒரு தூதரேயன்றி வேறல்லர். திண்ணமாக அவருக்கு முன்பும் தூதர்கள் பலர் சென்றுள்ளனர். எனவே, அவர் மரணமெய்திவிட்டால் அல்லது கொல்லப்பட்டு விட்டால் நீங்கள் முந்திய வாழ்க்கைக்குத் திரும்பிச் சென்று விடுவீர்களா? நினைவிருக்கட்டும்! எவன் அவ்வாறு திரும்பிச செல்கின்றானோ, அவனால் அல்லாஹ்விற்கு எத்தகைய தீங்கும் செய்துவிட முடியாது. ஆயினும், நன்றி செலுத்தி வாழ்பவர்களுக்கு அல்லாஹ் அதற்குரிய கூலியை மிக விரைவில் வழங்குவான்" (3:143)

இன்னொரு காரணத்துக்காகவும் அல்குர்ஆன் அவர்களைத் திரும்பக் கண்டிக்கிறது:

''இறைதூதர் உங்கள் பின்னால் இருந்து உங்களை அழைத்துக் கொண்டிருக்க நீங்கள் யாரையும் திரும்பிப் பார்க்காதவாறு ஓடிக் கொண்டிருந்த நேரத்தை நினைத்துப் பாருங்கள்" (3:153)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்கள் போராட்ட மைதானத்தில் உறுதியாக நிலைத்திருக் கிறார்கள். இந் நிலையில் முஸ்லிம்கள் பின்வாங்கி ஓடுகின்றனர்; யாருடைய அழைப்பையும் காதில் வாங்கிக் கொள்ளாது அவர்கள் பின்வாங்கிச் செல்கின்றனர். நபி (ஸல்) அவர்களை அழைக்கிறார், மறுமையை ஞாபகபபடுத் துகிறார்; முன்னோரின் நிலைகுலையா மையை எடுத்துரைக்கின்றார். இக் காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். ''(இதற்கு முன்பு) எத்தனையோ இறைதூதர்(களும் அவர்)களோடு சேர்ந்து இறை அன்பர்கள் பலரும் போர் புரிந்தார்கள். அல்லாஹ்வின் வழியில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங் களினால் அவர்கள் மனந்தளர்ந்து விடவில்லை; ஊக்கம் குன்றவுமில்லை. (அசத்தியத்திற்கு முன்) அவர்கள் பணிந் திடவுமில்லை. நிலைகுலையாத இத்தகைய பொறுமையாளர்களையே அல்லாஹ் விரும்புகிறான்'' (3:146)

### 5. மீளவும் ஆறுதல் கூறுதல்

''பின்னர் இத் துன்பத்திற்குப் பிறகு மன ஆறுதலை அளிக்கக்கூடிய சிற்றுறக் கத்தை அல்லாஹ் உங்களுக்கு அருளினான். உங்களில் ஒரு குழுவினரை அது ஆட் கொண்டது'' (3:154)

நபி (ஸல்) அவர்களது உள்ளத்தில் அவர்கள் மீதான பாசம் பொங்கி வழியச் செய்யப்படுகிறது.

''(நபியே!) அல்லாஹ்வின மாபெரும் அருளினாலேயே நீர் இவர்களிடம் மென்மையாக நடந்து கொள்கின்றீர். நீர் கடுகடுப்பானவராகவும் வன்னெஞ்ச ராகவும் இருந்திருந்தால், இவர்களெல் லோரும் உம்மை விட்டு விலகிப் போயிருப்பார்கள். ஆகவே இவர்(களின் தவறு)களைப் பொறுத்துக் கொள்வீராக. மேலும் இவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்புக் கோருவீராக! மேலும் தீனுடைய பணிகளில் இவர்களையும் கலந்தாலோசிப்பீராக!'' (3:159)

கலந்தாலோசனைப்படி நடந்த தனால்தான் உஹத் யுத்தத்தில் தோல்வியைத் தழுவவேண்டி வந்தது. அத் தோல்வியின் பின்னர் கூட கலந்தா லோசனையை விடாது கடைப்பிடிக்கு மாறு தான் அல்குர்ஆன் இறை தூதரைப் பணிக்கின்றது.

கண்டிக்கின்ற போதும இங்கிதத்தை மறவாத, மிக இக்கட்டான சூழல்களில் கூட ஆறுதல் கூறுகின்ற இம் மார்க் கத்தின் அழகு எத்தகையது என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்!

### 6. தோல்விக்கான, நிலைகுலைந்த மைக்கான காரணங்கள்

மேற் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் எடுத்துரைக்கப்பட்டதன் பின்னர் தோல்விக்கான, நிலைகுலைந்த மைக்கான காரணங்கள் எடுத்துரைக் கப்பட்டுள்ளன. விடப்பட்ட தவறுகளி லிருந்து எக்காலத்தில், எவ்விடத்தில் வாழ்ந்தாலும் அனைத்து முஸ்லிம்களும் இவற்றிலிருந்து படிப்பினை பெற வேண்டும் என்பதனாலேயே இவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன:

**(அ) கருத்து முரண்பாடும் கட்டுப்படாமையும்:**

''அல்லாஹ் உங்களுக்கு (உதவி செய்வதாகக் கூறிய) தனது வாக்குறு தியை நிறைவேற்றி விட்டான். துவக்கத்தில் அவனது அனுமதியின் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை நீங்கள் தாம் (போரில்) வெட்டி வீழ்த்தினீர்கள்!'' (3:152) ஆனால் பிறகு என்ன நடந்தது? 'ஆனால் இறுதியில் நீங்கள் ஊக்கமிழந்து உங்களுடைய பணிகள் குறித்து ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொண்டிருப்பீர்கள்; மேலும் நீங்கள் மோகம் கொண்டிருந்தவற்றை (போர்ப் பொருட்களை) அல்லாஹ் உங்கள் கண்ணெதிரே காட்டிய உடனேயே (உங்கள் தலைவரின் கட்டளைக்கு மாறு செய்தீர்கள்'' இங்கு பாவச் செயலின் அபாயம் உணர்த்தப் பட்டுள்ளது. ''எனெனில், உங்களில் சிலர் இம்மையை விரும்புவோராய இருந்தனர்; வேறு சிலர் மறுமையை விரும்புவோராய் இருந்தனர்'' போராட்டத்தினூடாக சிலர் உலக இன்பங்களை எதிர்பார்த்தமையே தோல்விக்குக் காரணமாக அமைந்தது என்ற கருத்து இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

(ஆ) பாவங்கள்:

''இரு கூட்டத்தாரும் மோதிக் கொண்ட நாளில் உங்களில் யார் புறங்காட்டி ஓடினார்களோ, அவர்கள் செய்த சில தவறுகள் காரணமாகத்தான் ஷைத்தான் அவர்களை அடிசறுக்கச் செய்தான்'' (3:155)

(இ) தனி நபர்களில் தங்கியிருத்தல்:

மக்கள் சிந்தனையோடு கட்டுண்டிருப்பதனை விட அதிகமாக தனி நபர்களோடு கட்டுண்டிருப்பதால், அவர்களது உறுதி பலவீனமடையும். சிந்தனைக்கான அவர்களது சார்பு நிலையும் வலுவிழக்கும். நபி (ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்ற வதந்தி பரவிய போது சில ஸஹாபாக்கள் ஆயுதங்களைத் தூக்கியெறிந்தனர். அல்குர்ஆன் அவர்களது செயற்பாட்டைக கண்டித்தது.

''முஹம்மத் ஒரு தூதரேயன்றி வேறல்லர். திண்ணமாக, அவருக்கு முன்பும் தூதர்கள் பலர் சென்றுள்ளனர். எனவே அவர் மரணமெய்திவிட்டால் அல்லது கொல்லப்பட்டுவிட்டால் நீங்கள் முந்திய வாழ்க்கைக்குத் திரும்பிச் சென்று விடுவீர்களா?'' (3:144)

## முரண்பாடுகளையிட்டு எச்சரிக்கை

இவ்வத்தியாயம் முரண்பாடுகளையிட்டு எச்சரிக்கை செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தியிருப்பதை அவதானிக்கலாம். கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்பதற்கு, அணியினுள்ளே காணப்படும் உறுதி அதே தரத்தில் தொடர்ந்து இருப்பதற்குத் தடையாக அமைகின்ற காரணிகளில் முக்கியமானதாகக் கருத்து முரண்பாடே காணப்படுகிறது. அதனாலேயே இவ்வத்தியாயம் அதற்கு முக்கியத்துவமளித்து விளக்கியுள்ளது.

1. குழப்பத்தை உருவாக்கும் நோக்கில், பிழையான விளக்கங்களை முன்வைக்கும் நோக்கில முதஸாபிஹாத் ஆன வசனங்களைப் பின்பற்றுவதை யிட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது:

''எவர்களுடைய இதயங்களில் கோளாறு உள்ளதோ அவர்கள் குழப்பம் செய்யும் நோக்கில் முதஷாபிஹான வசனங்களைத் தேடித்திரிந்து கொண்டும், அவற்றின் கருத்தைத் திரித்துக் கூற முயற்சி செய்து கொண்டுமிருப்பார்கள் (3:7)

2. கிளையம்சங்களில் முரண்பட்டு, பிரிந்து செல்வதையிட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது: 18ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுக்கை உண்டாக்கும் அழுக்கு

அஷ்ஷெய்க் எச்.ஐ. கைருல்பஷர் B.A.(Hons) M.A (Sudan)

சென்ற இதழின் தொடர்

**சிலேடைப் பேச்சு**

பொய் வெறுப்புக்குரிய பண்பு; அதன் விளைவுகள் மிகப் பாரதூரமானவை என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. முஸ்லிம், காபிர் என்ற வேறுபாடின்றி, அனைவரும் இதில் உடன்பாடானவர்களே. பொய்யைத் தவிர்க்கும் எண்ணங் கொண்டவர்கள் கூட நீண்ட உளப் போராட்டத்திற்குப் பின் ''இன்றைய உலகில் அது சாத்தியமில்லை'' என்பர். ஆபத்துக்குப் பொய்யுரைப்பது பாவமில்லை" என்றும் கூறி பொய்யை நியாயப்படுத்த முனைவர்.

இதற்கு தூய இஸ்லாம் ஆரோக்கியமான ஒரு வழியை சொல்லித தருகின்றது. இதை பொய்யுரைக்கான உபாயம் என வர்ணிக்கலாம். ஒரு சொல் இரு பொருள்களில் பிரயோகிக்கப்பட்டு. அதற்குரிய கிட்டடிப் பொருளை அன்றி, தூரமான பொருளை நாட்டமாகக் கொண்டு பேசுவதே அவ் வழிமுறையாகும். இம் மொழிப் பிரயோகம் அரபு மொழியில் ''தவ்ரியா'' என்றும் தமிழில் ''சிலேடை'' என்றும் அழைக்கப்படுகின்றது.

பொய்யுரைக்க இஸ்லாம் சலுகை அளித்துள்ள சந்தர்ப்பங்கள் பற்றிப் பேசும் ஹதீஸுக்கு விளக்கமளிக்கும் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், சிலேடையாகப் பொய்யுரைப்பதே ஆரோக்கியமானது என அபிப்பிராயப் படுகிறார். இதற்கு ஓர் உதாரணமாக பின்வரும் நிகழ்வைக் குறிப்பிடலாம்: அபூபக்கர் (ரழி) அவர்களிடம் ''இவர் யார்?" எனக் கேட்க, '' எனக்கு வழிகாட்டிச் செல்பவர்" எனப பதிலளித்தார்கள். ''வழிகாட்டி'' என்ற பிரயோகத்தின் மூலம் ''வாழ்க்கைக்குரிய வழிகாட்டி" என்ற கருத்தையே அவர் நாடினார். எனவேதான் உமர் (ரழி) அவர்கள் ''ஒரு மு.்.மின் பொய்யிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள சிலேடைப் பேச்சு ஆரோக்கியமான வழி" எனப் பிரஸ்தாபிக்கிறார்.

இறைதூதர் (ஸல்) அவர்கள், சிலேடை அடிப்படையில் நகைச்சுவையாகப் பேசிய சந்தர்ப்பங்களும் உண்டு. நபிகளாரிடம் ஒரு மூதாட்டி வந்த போது, ''கிழவிகள் சுவனம நுழையமாட்டார்கள்" என ஹாஷ்யமாக நபியவர்கள் கூறினார்கள். அப்போது அந்த மூதாட்டி அழுதுவிட்டார். உடனே நபிகளார், ''சுவனம் நுழையும் போது நீர் கிழவியாக இருக்க மாட்டீர்" எனப் பகர்ந்து ''நிச்சயமாக (ஹூருல் ஈன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பெண்களைப்) புதிய படைப் பாக நாம் உண்டாக்கி அப் பெண்களை கன்னிகளாகவும் ஆக்கி வைத்துள்ளோம்" (56: 35-36) என்ற குர்ஆன் வசனத்தை ஓதினார்கள். (திர்மிதி)

அழுது அடம்பிடிக்கும பிள்ளையை ஆற்றுப்படுத்தத் தந்தையர் பொய் வாக்குறுதிகளை வழங்கி பிஞ்சு உள்ளங் களை பாதிப்புக்கு உள்ளாக்குவர். "அழாதே மகளே! நான் உனக்கு 'சாக்கலேட்' வாங்கி வருகிறேன்." என்பன போனறு கூறி நிலைமையைச் சமாளிப்பர். அவ்வாறு செய்ய முடியாமல் போகும் பட்சத்தில் வாக்குறுதி பொய்யாகிவிடும். எனவே இமாம் நகஈ (ரஹ்) அவர்கள் இதற்கு ஓர் ஆரோக்கியமான வழியைக் கற்றுத் தருகிறார்: "மகளே! உனக்கு நான் சாக்கலேட் வாங்கிவந்தால் எப்படி!" எனக் கூறுவதே அதுவாகும்.

**ஸுன்னாவின் பார்வையில்**

மனித உறுப்புக்களில் ஆபத்தானது நாவு. "மனிதர்களை நரகில் முகம் குப்புற வீழ்த்துவது அவர்களின் நாவாகும்". (திர்மிதி) என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். மனிதன் தெளிவாகப் பேசக் கூடியவன். எனினும் அளந்து பேசக் கடமைப்பட்டவன். சிந்தித்துப் பேசாதவன் மௌனமாயிருப் பது அனைத்து வகையிலும் ஆரோக்கிய மானது. அபூதர் (ரழி) அவர்களுக்கு நபிகளார் பின்வருமாறு உபதேசித்தார்கள்: "நீண்ட மௌனத்தைக் கடைப்பிடி. அது ஷைத்தானை விரட்டக்கூடியது. உன் மார்க்க விவகாரங்களில் உனக்கு உறுதுணையாக இருக்கக் கூடியது."
(அல்ஹாகிம்)

அதிகப் பிரசங்கித் தனத்தை கண்டித்த நபி (ஸல்) அவர்களிடம அகபா இப்னு ஆமிர் என்ற நபித் தோழர், "மீட்சி எதிழுண்டு?" எனக் கேட்ட போது, "உனது நாவைப் பேணிக்கொள். உன் வீட்டாரைக் கவனித்துக்கொள். உன் தவறுக்காகக் கண்ணீர் வடி" (திர்மிதி) என விடை பகர்ந்தார்கள்.

பொய்யுரை சூழலைப் பாதிக்கும் நோய்க் கிருமி போன்றது. மனிதனும் அவன் வாழும் சூழலும் இதிலிருந்து தப்புவது அபூர்வம். இதிலிருந்து பரிசுத்தமடைந்த ஒரு சமூகத்தையோ அல்லது ஒரு பிரிவினரையோ காண்பது சிரமசாத்தியமானது. நபிமார்கள், சத்திய சீலர்கள், தூய இறை அடியார் கள் உலகில் இல்லை என்றிருந்தால் பொய்யர்களின் விஷமத்தில் புவிச் சூழல் மாசடைந்து போயிருக்கும்.

பொய்யுரை அனைத்துத் தீமைகளுக கும் ஆணிவேராகும். தெளிவான உண்மையை மறுப்பதும் பொய்யுரைப் பதற்கு நிகரானது. மனித வரலாற்றில் இறை தூதை ஏற்க மறுத்த (பொய்ப் படுத்திய) பல சமூகங்கள் அல்லாஹ்வின் கடும் சினத்தக்கு உடந்தையாகி பேரழிவை சந்தித்தமை படிப்பினைக் குரியது. நபிகளாரின் ஸுன்னாவில் பொய் அதன் பல்வேறு வடிவங்களில் கண்டிக்கப்பட்டுள்ளது. பொய்ச் சாட்சியம், பொய்ச் சத்தியம், அவதூறு கட்டுதல், முகஸ்துதி, நயவஞ்சகம், வதந்தி பரப்புதல், வாக்கு மீறல், உடன் படிக்கை முறித்தல், கலப்படம், மோசடி முதலான அனைத்துப் பாவங்களும் பொய்யோடு தொடர்பானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபரிமிதமான நன்மைகளை ஈட்டித்தரும் மகத்தான இறைவழிபாடு கள் அல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெறாமல் இருப்பதற்கு அடியானின் பொய்யுரை குணம் அடிகோலும் என்பதை ஹதீஸ்கள் எச்சரிக்கின்றன. ''பொய் கூறுவதையும் அதன்படி செயல்படுவதையும் தவிர்க்காத ஒரு நோன்பாளி பசித்து, தாகித்திருப்பதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் கிடையாது'' என்ற நபி வாக்கு இதற்கு ஆதாரமாகும்.

பொய் ஒரு பாவம் என்பதை மறுத லிப்பது போல சிலர் 'அது ஒரு சாதாரண விடயம்' என்றும் 'தவிர்க்க முடியாதது' என்றும் நியாயப்படுத்த முற்படுவர். இது எத்துணை பாரதூரமான விடயம் என்பதை உணர்ந்து, பொய்யை தவிர்ப் பதற்கு நபிகளாரின் அச்சுறுத்தலை பின்வரும் ஹதீஸ்கள் ஊடாக விளங்கிக்கொள்ளலாம்:

''நீங்கள் உண்மையை பற்றிக் கொள்ளுங்கள். அது நன்மையின் பால் வழிகாட்டக் கூடியது. நன்மை சுவனத் துக்கு வழிகாட்டும். உண்மை உரைப் பவனும் அதைக் கடைப்பிடிப்பவனும் அல்லாஹ்விடம் 'உண்மையாளன்' எனப் பதியப்படுவான். உங்களுக்கு பொய்யு ரைப்பதை நான் எச்சரிக்கிறேன். அது தீமைக்கு வழிகாட்டக்கூடியது. தீமை நரகுக்கு வழிகாட்டும். பொய்யுரைத்து வாழ்வைப் பழ்படுத்திக் கொள்பவன் அல்லாஹ்விடம் 'பொய்யன்' எனப் பதியப்படுவான். (புகாரி, முஸ்லிம்)

மறைவான விடயங்கள் சிலவற்றை உண்மைப்படுத்தியவனே விசுவாசி யாவான். பொய் ஈமானைக் களங்கப் படுத்தும். போலி விசுவாசம் கொண்ட நய வஞ்சகனின் அடிப்படைப் பண்பாக அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் அது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

''ஒரு மு:மின் கோழையாக இருக்க முடியுமா? என நபிகளாரிடம் கேட்கப் பட்டபோது அவர்கள், ''ஆம்'' என்றார் கள். ''அவன் ஓர் உலோபியாக இருக்க முடியுமா?'' என வினவப்பட்டபோதும் ''ஆம்'' என்றார்கள். ''அவன் ஒரு பொய்ய னாக இருக்க முடியுமா?'' என வினவப் பட்ட வேளை, ''அவ்வாறு இருக்க முடியாது'' என்ற பொருளில் ''இல்லை'' எனப் பதிலளித்தார்கள். (முஅத்தா)

அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையிலான இடைவெளி பொய் மூலமாக விரிசலடைகின்றது. ''அடியான் பொய்யுரைக்க, அதன் துர்வாடையால் (கூட இருக்கும்) மலக்கு அவனை விட்டும் ஒரு மைல் தூரமாகின்றார்.'' (திர்மிதி) என்ற நபி மொழி இக்கருத்தை சூசகமாக சுட்டுகின்றது.

பிறரை சிரிப்பூட்டுவதற்காக ஹாஷ்யமாகப் பொய் உரைப்பவன் கூட அல்லாஹ்வின் தண்டனையி லிருந்து மீள முடியாது. ஜஹன்னம் எனும் நரகின் கொதிக்கும் ஒரு சிற்றாற்றில் அவன் தண்டிக்கப்படுவான் என்பதை அபூதாவூத், திர்மிதி, நஸாஇ, பைஹகி முதலான கிரந்தங்களில் இடம் பெற்றுள்ள ஒரு ஹதீஸ் எச்சரிக்கின்றது.

இறை தூதர் (ஸல்) அவர்களுக்கு மிக வெறுப்பூட்டும் ஒரு குணமாக ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் பொய்யை இனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றது. "பொய்யுரைப்பதை விட அல்லாஹ்வின் தூதருக்கு அதிகம் வெறுப்புக்குரிய மற்றொரு பண்பு இருந்ததில்லை. யார் ஒருவரிடம் பொய் சற்றேனும் காணப்பட்டு, அது அவனது உள்ளத்திலிருந்து வெளிப்படுவதை இறை தூதர் கண்ணுற்றால் அவன் உடனடியாக தௌபாவை தனக்கு வருத்திக் கொண்டான் என்பதை நபிகளார் அறிந்துகொள்வார்கள். (அஹ்மத், இப்னு ஹிப்பான், அல் ஹாகிம்)

"அல்லாஹ் மறுமையில் மூன்று நபர்களுடன் பேசமாட்டான். அவனைப் பரிசுத்தமாக்கவும் மாட்டான்; பார்க்கவும் மாட்டான். அவர்களுக்கு நோவினை தரும் தண்டனை உண்டு. ஒருவர் விபச்சாரத்தில் ஈடுபட்ட வயோதிபர், மற்றவர் அதிகம் பொய்யுரைத்த ஆட்சி யாளன், அடுத்தவர் பெருமையடித்த ஏழை." (முஸ்லிம்) இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கூற, அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். அல்லாஹ்வின் அருளும் கருணையும் எதிர்பார்க்கப்படும் வேளையில் அவனது புறக்கணிப்புக்கு ஆளாகுவது துர்ப்பாக்கியமாகும்.

பொய் ஒரு சாதாரண பாவமல்ல; பெரும் பாவங்களில் ஒன்று என்பதை நபிகளார் கூறிய, அபூபக்கர் (ரழி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் ஆதாரப்படுத்துகின்றது. "பெரும் பாவங் களில் மூன்றை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்க, தோழர்கள் "ஆம்" அறிவியுங்கள்" எனப் பகர்ந்தனர். அப்போது அண்ணலார், "அல்லாஹ் வுக்கு இணை வைத்தல், பெற்றோரைத் துன்புறுத்தல்" எனக் கூறிவிட்டு, பக்கவாட்டில் சாய்ந்திருந்தவர் சீராக உட்கார்ந்து மூன்றாவதாக "பொய்யு ரைத்தல்" என பல தடவைகள் மீட்டி மீட்டிக் கூறினார்கள். "அவர்கள் பேசுவதை நிறுத்தி மௌனம் சாய்க்கக் கூடாதா" என நாம் ஆவலோடு எதிர்பார்க்குமளவுக்கு அண்ணலார் அவ்வாறு மீட்டிக் கொண்டிருந்தார்கள்.

"ஒரு பாவத்துக்கு உடந்தையான முறையில் ஒரு முஸ்லிமின் செல்வத்தை உரிமையின்றி அபகரித்துக் கொள்வதற் காக யார் சத்தியம் செய்கிறாரோ அவர் மறுமையில் அல்லாஹ்வை அவன் கோபமுற்ற நிலையில் சந்திப்பான்" (புகாரி, முஸ்லிம்) என்ற இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் இங்கு குறிப்பிடத்தக்கது. பாவத்துக்கு உடந்தை என்பது இங்கு பொய்ச் சத்தியத்தைக் குறிக்கின்றது.

"ஒருவன் உண்மையாளனாக இருப்பினும் பரிகாசத்துக்கேனும் பொய்யுரைப்பதை தவிர்க்கும் வரை முழுமையான விசுவாசியாக மாட்டான்" (அஹ்மத்) என்ற நபி மொழியும் எமது கவனத்தை ஈர்க்கத்தக்கது.

"உங்களுக்கு சந்தேகத்தை எச்சரிக் கின்றேன். நிச்சயமாக சந்தேகம் என்பது பொய்யுரையாகும்" (புகாரி,முஸ்லிம்) என்னும் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கும் நபி மொழி சமூகத்தின் பல்வேறு சீர்கேடுகளுக்கும் பரிகாரமாக அமைகின்றது. சந்தேகம் வேகமாகப் பரவும்போது வதந்தியாக மாறுகின்றது. கண்ணால் பார்ப்பதும், காதால் கேட்பதும் கூட பொய்யாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். தீர விசாரித்து உறுதிப் படுத்தாத வரை உண்மையை உண்மை என ஏற்க முடியாது.

பொய்யுரைப்பதை தவிர்ப்பது அனைத்துப் பாவங்களில் இருந்தும் மீட்சி பெறுவதற்கான வழியாகும் என்பதை பின்வரும் நிகழ்வு சுட்டிக் காட்டுகின்றது. இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் ஆஜரானார்: ''அல்லாஹ்வின் தூதரே! நான் மூவகைப் பாவங்களை ஒளித்து மறைத்துச் செய்து வருகிறேன். மது அருந்துவது, விபச்சாரம் செய்வது, பொய்யுரைப்பது. இவற்றில் எதை முதலில் தவிர்க்க வேண்டும் என எனக்கு உபதேசியுங்கள். ''எனக் கேட்டார். நபிகளார் ''பொய்யை'' என விடை பகர்ந்தனர். திரும்பிச் சென்ற அம்மனிதர் விபச்சாரத்தை விரும்பினார். பின்னர் சந்தித்தார், நான் நான் நபிகளாரிடம் சென்றால் அவர்கள் ''நீ விபச்சாரத்தில் ஈடுபட்டாயா? எனக் கேட்டு, ''ஆம்'' என்றால் எனக்கு கசையடி தண்டனையாகும். ''இல்லை'' என்றால் உடன்படிக்கையை முறித்தவனாவேன். இப்படி இப்படி மது அருந்துவதைப் பற்றியும் சிந்தித்தார். பொய்யை தவிர்த் ததன் மூலம் உளப் பரிசுத்தத்துக்கான வாசல் அவருக்கு திறக்கப்பட்டது.

## கட்டாய சந்தர்ப்பங்கள்

ஒரு முஸ்லிம் பொய்யுரைக்க நிர்ப் பந்திக்கப்படும் கட்டாய சந்தர்ப்பங்கள் மூன்றாகும். இதற்கு ஸுன்னா ஆதார மாகக் கொள்ளப்படுகின்றது. பொய் தீமையானது என்பதில் சந்தேகமற்ற உண்மையாகும். எனினும் இறை சட்டங்கள் அடிப்படையில் அவற்றின் நோக்கங்கள். நலன்களை பின்புலமாகக் கொண்டவை என்பதனால் மார்க்க வரம்புக்குட்பட்ட மனிதாபிமான நோக்கில் பின்வரும் மூன்று சந்தர்ப் பங்கள் விதிவிலக்காக நோக்கப்படு கின்றன. (1) யுத்தகளம் (2) தர்க்கத்தில் ஈடுபடும் இரு சகோதரர்களுக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்துதல் (3) கணவன் மனைவிரிடையே பிளவு உண்டாவதைத் தவிர்த்தல்.

நபிகளாரின் நடைமுறை அஸ்ஸுன்னா இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களில அல்குர்ஆனுக்கு அடுத்து இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது. ஸுன்னாவை அடியொட்டி 'கியாஸ்' ஒப்புநோக்குவ தன் மூலம், இவை அல்லாத, ஆனால் இவை போன்ற வேறு சந்தர்ப்பங்களில் மேலே குறிப்பிட்ட நோக்கத்தை 'இல்லத்'தை காரணியாக வைத்து பொய்யுரைப்பதை ஆகுமாக்க முடியுமா என்ற விடயத்தில் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் தீர்ப்பு உடன்பா டாகவே உள்ளது.

இமாமவர்களின் கருத்தை ஆதரிக்கும் அஷ்ஷெய்க் ஹஸன் ஐயூப் என்ற இஸ்லாமிய அறிஞர் ''கியாஸ் என்னும் சட்டமூலத்தை அடிப்படை யாகக் கொண்டு இம் மூன்று சந்தர்ப் பங்களையும் ஒப்பிட்டு அவற்றில் உள்ளது போன்ற நோக்கத்தை பிரதி பலிக்கும் வேறு சந்தர்ப்பங்களிலும் பொய்யுரைக்க அனுமதியுண்டு'' என அபிப்பிரயாப்படுகிறார். (அஸ்ஸுலுக் அல் இஜ்மாஇ ∴பி அல் இஸ்லாம், பக்:159) பேச்சு மனிதன் விரும்புகின்ற சில நல்ல நோக்கங்களை அடைவதற் கான சாதனமாகும். அத்தகு நன்னோக் கும் கட்டாயமாக (வாஜிப்) உணரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு பொய்யுரைப்பதனூடாகவே அதை அடைய முடியுமென்றால் அச் சந்தர்ப்பத்தில் பொய்யுரைப்பது கடமையாகும் என்பதே இவரின் அபிப்பிராயமாகும்.

தன்னைக் கொல்ல வருகின்ற ஓர் அநியாயக் காரனிடம் ஒரு முஸ்லிம் உனக்குத் தெரிந்த ஓரிடத்தில் ஒளிந்து கொண்டான். அவனைப் பற்றி குறித்த அநியாயக் காரன் உன்னிடம் வினவினால் ''எனக்குத் தெரியாது'' எனக் கூறி அவனைக் காப்பாற்றுவது முஸ்லிம் என்ற வகையில் உனக்கு வாஜிபாகும். இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் உன் நிராகரிப்பை நியாயப்படுத்த சத்தியம் செய்ய நேர்ந்தாலும் அது ஆகும். இதற்கான நிபந்தனை குறித்த மனிதன் அநீதிக்கு உட்பட்டவன் என்ற தெளிவான அறிவு உன்னிடம் இருக்க வேண்டும். கொலை, கொள்ளை முதலான குற்றச் செயல்கள் தண்டனைக்கு உட்பட்டவனாக அவன் இருக்கக் கூடாது. இஸ்லாமிய அரசில் வாழும் முஸ்லிம் அல்லாத (திம்மி) ஒருவனுக்கு இது பொருந்தும் என்பது மேற் குறிப்பிட்ட அறிஞரின் கருத்தாகும்.

இஸ்லாத்துக்காகவும் முஸ்லிம்களின் நலனுக்காகவும் போராடும் ஒரு முஸ்லிமை எதிரிகள் கைது செய்து விசாரணை செய்யும் போது, தனது சக தோழர்களின் பெயர்களையும் இருப்பிடத்தையும் வெளிப்படுத்தக் கோரும் பட்சத்தில் ''எனக்கு எதுவும் தெரியாது'' எனக் கூறி சத்தியமிடவும் அவனுக்கு அனுமதி உண்டு என்றும் அஷ்ஷெய்க் ஹ்ஸன் ஐயூப் குறிப்பிடுகிறார்.

12ம் பக்கத் தொடர்

'' நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள்'' (3:103)

அல்லாஹ்வுடைய வசனங்களில் கருத்து முரண்பாடுபட்டு பிரிந்து செல்வதையிட்டு இவ்வத்தியாயம் எச்சரிக்கை விடுக்கின்றது:

''எவர் தம்மிடம் தெளிவான அறிவுரைகள் வந்ததன் பின்னர் தங்களுக்குள் வேறுபாடு கொண்டு பற்பல பிரிவினர்களாகச் சிதறுண்டு விட்டார்களோ அவர்களைப் போல் நீங்களும் ஆகிவிடாதீர்கள்'' (3:105)

3. முஸ்லிம்களுக்கிடையில் முரண்பாடுகளுக்குக் காரணமாக அமையும் வட்டியையிட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது:

''இறை நம்பிக்கை கொண்டவர்களே! பன்மடங்காகப் பெருகி வளரும் வட்டியை உண்ணாதீர்கள்'' (3:130)

4. பிறரது கருத்துக்கு மதிப்பளிக்காது, ஏதேச்சிகாரப் போக்கில் தொழிற்படுவதையிட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனாலேயே உஹுத் யுத்தத்தில் பல கஷ்டங்களை அனுபவித்த பின்னரும் கூட கலந்தாலோசிக்குமாறு ஏவப்பட்டுள்ளது.

''ஆகவே, இவர் (களின் தவறு) களைப் பொறுத்துக் கொள்வீராக! மேலும் இவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்புக் கோருவீராக. மேலும் தீனுடைய பணிகளில் இவர்களையும் கலந்தாலோசிப்பீராக! (ஏதாவதொரு விடயத்தில்) நீ உறுதியான முடிவுக்கு வந்து விட்டால், அப்பொழுது அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருப்பீராக'' (3:159) **(தொடரும்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்
## முன்னுரிமையும் பின்னணியும்

அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். அரபாத் கரீம் (நளீமி)

**சுருக்கம்**

*சமகால அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற கொள்கை முஸ்லிமின் சிந்தனையை பாதித்துள்ள சிக்கல்களிலிருந்து அவனை விடுவித்து, இஸ்லாமிய அடிப்படைகளால் வடிவமைப்பதற்குத் தேவையான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கான வேலைத் திட்டமாக சமகால அறிஞர்களால் முன்வைக்கப்பட்டது. இஸ்லாமிய மயப்படுத்தல் இயக்கத்தின் முன்வரிசைப் போராளிகள், இக்கொள்கை சமகால உலகில் தோற்றம் பெறுவதற்கான நியாயங்கள், இந்த நிகழ்ச்சி நிரலுக் கூடாக மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து ஆராய்வதாக இக் கட்டுரை அமைகிறது.*

**அறிமுகம்**

அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற கோட்பாடு கடந்த மூன்று தசாப்தங்களாக கூடிய கவனயீர்ப்பை முஸ்லிம் புத்தி ஜீவித்துவ மட்டத்தில் பெற்றுவந்துள்ளது. சமகால முஸ்லிம் உம்மாவும் பொதுவாக மனித இனமும் எதிர்கொள்ளும் சவால்களுககு சிறந்த தீர்வாக ''இஸ்லாமிய மயப்படுத்தல்'' என்ற கொள்கை பல்வேறு மட்டங்களால் முன்மொழியப்பட்டு வருகிறது. இக்கோட்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கோடு பல்வேறு நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சர்வதேச மட்டத்தில் பல்வேறு மாநாடுகள் நடாத்தப்பட்டு, இஸ்லாமிய உலகின் சிந்தனையாளர்களால் பல அறிவுப் பங்களிப்புக்கள் செய்யப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 'அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்' என்ற நிகழ்ச்சி நிரலை சமகால பிரச்சினைகளுக்குத் தீர்வுத் திட்டமாக முன்வைத்தவர்களுள் பேராசிரியர் இஸ்மாஈல் ராஜி பாரூகி(1), பேராசிரியர் நகீப் அத்தாஸ்(2) முன்னணி வகிக்கிறார்கள். இவ்விரு சிந்தனையாளர்களும் இக கோட்பாட்டை மிகச் சரியாக உலகிற்கு முன்வைப்பதிலும் அதன் கருத்து, அவசியம், எல்லைகள், இலக்குகள் என்ற அனைத்துப் பரிமாணங்களையும் தழுவியதாக, இக் கோட்பாட்டை சமூக தளத்தில் பேசுபொருளாக ஆக்குவதிலும், சமகால முஸ்லிமின் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைப்பதிலும் பெரும் பங்காற்றினார்கள். பேராசிரியர் இஸ்மாஈல் பாரூகி 1981ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் இஸ்லாமியய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் (IIIT)யையும், பேராசிரியர் நகீப் அத்தாஸ் 1987ல் கோலாலம்பூரில் இஸ்லாமிய சிந்தனை மற்றும் நாகரிகம் என்பவற்றுக்கான சர்வதேச நிறுவனத்தை ISTAK யையும் தோற்றுவித்தார்கள். இவ்விரு அறிஞர் களின் சிந்தனைத் தாக்கத்துக்கு உட் பட்ட புத்திஜீவித்துவ வட்டமொன்று சர்வதேச மட்டத்தில் தோன்றி அவர் களுக்கூடாக இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

## அறிவை இஸ்லாமிய மயப்படுத்த லுக்கான நியாயம்

'அறிவை இஸ்லாமிய மயப்படுத் தல்' என்ற கோட்பாடு தோன்றுவதற்கு பல்வேறு நியாயங்கள், காரணிகள் ஏதுவாக இருந்தன. அவற்றுள் பிரதான காரணங்களுள் ஒன்றாக முஸ்லிம சமூகத் தின் கல்வி சார்ந்த பிரச்சினை அடையா ளப்படுத்தப்படுகிறது. கல்விக் கொள்கையை மதம், மதச் சார்பற்ற என்ற இரு நிலைகளில் வைத்து நோக்கியமை அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் வேண்டும் என்பதற்கு பின்னாலுள்ள பிரதான நியாயமாகும். முஸ்லிம் கல்வி தொடர்பாக 1977ம ஆண்டு மக்காவில் இடம்பெற்ற முதலாவது உலக மாநாட் டைத் தொடர்ந்து (மக்கா உலக மகா நாடு)[3] முஸ்லிம் உம்மத்தின் பிரதான பிரச்சினை அடையாளப்படுத்தப் பட்டது. சமகால உலகில் அறிவை இரட்டைத் தன்மையோடு கூறுபோட்டு நோக்கும் நிலை தோன்றி, மதச்சார்பற்ற கொள்கை அறிவை தெய்வீகத்திலிருந்து வசதியாக விடுவித்து நோக்கும் அதேவேளை, தெய்வீக அறிவு பல்வேறு நிறுவனங் களில் வெறுமனே பிக்ஹ், இபாதா மற்றும் உஸுலுத்தீன் என்ற எல்லைகளுக்குள்ளால் மட்டுப்படுத்தப் பட்டுள்ள நிலை தோன்றியுள்ளது.[4] இதன் விளைவாக அறிவு பற்றிய இஸ்லாத்தின் விரிந்த பார்வை சமகால சூழலில் இல்லாதொழிக்கப்பட்டு வேறு பல சிக்கல்களையும் சவால்களையும் முஸ்லிமின் சிந்தனையிலும், சமூக வாழ்விலும் ஏற்படுத்தியுள்ளது. குர்ஆன், ஸுன்னாவின் பின்னணியிலிருந்து அறிவு மற்றும் சிந்தனைகள கட்டியெழுப் பப் படாதிருப்பதும், மனிதனின் சிந்த னையை வடிவமைப்பதில் பாரிய பங்களிப்புச் செய்யும் பாடசாலை, பல் கலைக்கழகங்களது பாடவிதானங்கள் இஸ்லாமிய அறிவியல் கோட்பாட்டின் அடிப்படைகளில் வடிவமைக்கப் படா திருப்பதும் பல சிக்கல்களை நவீன உலகில் தோற்றுவித்துள்ளன. இந்தப் பின்னணியில், இத்தகைய இரட்டைத் தன்மை கொண்ட அறிவுப் பாரம்பரி யத்தை நீக்குவதற்குத் தேவையான வழிவகைகளை சிந்திக்கையில் நவீன இஸ்லாமிய அறிஞர்களான இஸ்மாஈல் ராஜி பாரூகி, நகீப் அத்தாஸ், அபூ ஸுலை மான், இமாதுத்தீன் கலீல், தாஹா ஜாபிர் அல்வானி, கமால் ஹஸன் போன்றோர் மனித அறிவை இஸ்லாமிய மயப்படுத்துவதே சமகால உலகின் முதன்மைத் தேவை என்பதை கண்டறிந்தார்கள்.

அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற இயக்கத்தை தோற்றுவிப்பதில் வேறு காரணிகளும் செல்வாக்குச் செலுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதை நவீன வரலாற்றை நோக்குகையில் புரிந்துகொள்ள முடிகிறது. அந்தவகையில் பின் வரும் காரணிகளையும் இத்துறையில் ஈடுபாடு காட்டும் அறிஞர்கள் குறிப்பிடுவர்:

1. மிக அதிகமான முஸ்லிம நாடுகள் இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து காலனித்துவ வாதிகளின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்றன. முஸ்லிம் நாடுகள் அரசியல் ரீதியாக சுதந்திரம் பெற்றதைத தொடர்ந்து, முஸ்லிம் உலகின் அரசியல் பிரச்சினை களுக்கான இஸ்லாமியத் தீர்வுகளைத் தேடவேண்டிய நிலை உருவாகியது. இத்தகைய தனித்துவமிக்க இஸ்லாமிய அரசியல் தீர்வுகளை தூய மற்றும் விரிந்த இஸ்லாமிய தளத்திலிருந்து சிந்தித்து, தகுந்த தீர்வுத் திட்டங்களை வகுப்பதன் தேவை குறித்து சிந்தித்த வேளை இஸ்லாமிய மயப்படுத்தலின் அவசியப்பாடு உணரப்பட்டது.[5]

2. சோஸலிஸ மற்றும முதலாளித்துவ பொருளியல் கொள்கைகள் உலக முன்னேற்றத்துக்கு வழியமைக்காது என்பதை உலக அனுபவம் உணர்த்திய தைத் தொடர்ந்து, இஸ்லாமியத் தீர்வு களையும், மாற்றீடுகளையும் பற்றி சிந்தித்து இஸ்லாமிய பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து செயற்படுத்து வதின் அவசியம் குறித்து சிந்திக்க ஆரம்பித்த வேளையில், இஸ்லாமிய மயமாக்குதல் என்ற கொள்கை உலகின் கவனத்தை ஈர்த்தது.[6]

3. முஸ்லிம் உம்மத எதிர்கொள்ளும் உள்ளக Internal மற்றும் புறக் External காரணிகளும் இக் கொள்கையின் தோற்றத்தை நவீன காலத்தில் ஏற்படுத்தியது. இஸ்மாஈல் பாரூகி புறக் காரணிகளால் இத்தேவை உணரப்பட் டதையும், நகீப் அத்தாஸ் அகக் காரணிகளால் இஸ்லாமிய மயப்படுத்த லின் தேவை உணரப்பட்டதையும் விளக்குகின்றார்கள்.

இஸ்மாஈல் பாரூகி 1982ம் ஆண்டு மேற்கொண்ட இஸ்லாமிய மயப் படுத்தல் என்ற சிந்தனையை விரிவாக விளக்கும் ''வேலைத் திட்டம்'' என்ற தனது ஆக்கத்திலே- முஸ்லிம் உம்மத் சம காலத்தில் எதிர்கொள்ளும் மிகப் பிரதான பிரச்சினையாக Malaise of Ummah- சிந்தனைச் சிக்கலை அடையா ளப்படுத்துகிறார். முஸ்லிம் உம்மத் அரசியல் ரீதியாக- பிரிந்து ஒற்றுமை யிழந்து, இராணுவ ஆட்சிக்கு உட்பட் டிருக்கும் அதே வேளை, பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடையாது, மேற்குலகில் தங்கி, எண்ணெய வளத்தை பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத பாரிய அறிவியல் பின்னடைவுக்கு உட்பட்டிருக்கிறது. மார்க்க- கலாசார ரீதியாக மேற்குமயப்பட்டு, இஸ்லாம் மற்றும் அதன் கலாசாரத் தனித்துவத்தை விட்டும் முஸ்லிம் சமூகம் வெகு தூரத்தில நிற்கும் நிலை உருவாகியுள் ளது. இத்தகைய காரணிகளால் அரசியல், பொருளாதாரம், கலாசாரம் முதலான பகுதிகள் இஸ்லாமிய அடிப்படைகளால் ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும் என்ற கருத்தை புறக் காரணிகளாக பாரூகி குறிப்பிடுகிறார்.[7]

அதேவேளை முஸ்லிம் சமூகத்தின் பின்னடைவுக்கு பிரதான காரணம் அதன் உள்ளக காரணிகளே என வரையறுக்கும் நகீப் அத்தாஸ், மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானமாக loss of adab ஒழுக்க வீழ்ச்சியை அடையாளப்படுத்துகிறார். இங்கு ஒழுக்க வீழ்ச்சி என்பது உடல், அறிவு, ஆன்மா முதலானவை அவற்றுக் கான பணிகளை செய்யத் தவறியதன் விளைவாக ஒரு முஸ்லிம் சமநிலைத் தன்மையை இழந்து உள்ளார்ந்த சிக்க லுக்குள் அவனது அறிவு தள்ளப்பட்டி ருப்பதாகும்.[8]

எனவே இஸ்லாமிய மயப்படுத்தல் தொடர்பான பாரூகி, அத்தாஸ் ஆகியோரது நிலைப்பாட்டினையும், அறிவு சார்ந்த ஒரு மறுமலர்ச்சி ஒன்றின் அவசியப்பாடு பற்றி அவர்களிருவரும் முன்வைக்கும் கருத்துக்களையும் நோக்கும்போது, முஸ்லிமின் உள்ளத் தையும், சிந்தனையையும் மேறகத்தேய, மதச்சார்பற்ற சிந்தனைகள் ஆக்கிரமித் திருப்பதை உடனடியாக மேற்கு மயப்படுவதிலிருந்து விடுதலை செய்து, இஸ்லாமிய ரீதியாக பண்படுத்தி, இஸ்லாமிய கருத்துக்களையும் எண்ணக் கருக்களையும் வழங்குவதை அடிப்ப டையாகக் கொண்ட வேலைத திட்டமே இன்றுள்ள முதன்மைப் பணியாக அவர்கள் இனம்கண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இஸ்லாமிய உம்மத் வேண்டி நிற்கும் சமகால தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கோடு முன்வைக்கப் பட்ட ஒரு தீர்வுத் திட்டமாகத்தான் இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற கொள்கையை பார்க்க வேண்டியுள்ளது. இத்தகைய நியாயங்களின் பின்னணியில் தான் இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற எண்ணக்கரு ஒரு கொள்கையாக தோற்றம் பெற்று, அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற இயக்கமாக தொழிற்பட்டு வருகிறது.

### அறிவை இஸ்லாமிய மயப்படுத்தலின் கருத்து

இஸ்லாமிய மயப்படுத்தல் இயக்கம் முஸ்லிம் உம்மாவை அதன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுப்பிவிட்டுள்ளது. முஸ்லிம் உம்மத் நீண்ட பல ஆண்டு களாக மேற்கத்தேய காலனித்துவத்துக் குப் பணியாற்றிவிட்டு, இப்போது தூய இஸ்லாமிய வாழ்வு நெறியை தேடிப் புதுப் பொழிவோடு பயணிக்க ஆரம்பித் துள்ளது. மேற்கத்தேய காலனித்துவ செல்வாக்குக்கு உட்பட்டிருந்த காலப் பிரிவில், மதச் சார்பின்மை (Secular worldview)ன் அடியாகவே முஸ்லிம் உம்மத் அதன் அறிவையும், வாழ்வியல் ஒழுங்கையும் கட்டியெழுப்பியிருந்தது. மதச் சார்பின்மை இஸ்லாத்தின் அடிப் படை நம்பிக்கையைக் கூட ஆட்டங் காண வைத்தது. ஏனெனில் நவீன மேற்கத் தேய அறிவும், அதன் வாழ்வொழுங் கும் மதச்சார்பின்மை- secularism, சட வாதம் meterialism, தாராண்மைவாதம் libaralism ஆகிய இஸ்லாத்தின் கொள்கை களோடு முற்றிலும் முரண்பட்டு மோது கின்ற அடித்தளங்கள் மீதே கட்டியெழுப் பப்பட்டுள்ளது.[9] அதன் விளைவாக மேற்குலகும் அதன் தாக்கத்துக்கு உட்பட்ட இஸ்லாமிய உலகும் பாரிய நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வந்தன.

இத்தகைய மேற்கத்தேய செல்வாக்கை நீக்கி இஸ்லாமிய அடிப் படைகளை (Islamic world view) ஏற்படுத்தும் நோக்கோடு அறிமுகப்படுத் தப்பட்ட இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற கொள்கை பல்வேறு சொற்றொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் வழங்கப்படுகிறது. அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்- Islamization of Knowledge, சமகால அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்- Islamization of Contemporary or Present day Knowledge, நவீன கல்வியை இஸ்லாமிய மயப்படுத்தல்- Islamization of Modern Knowledge மனித அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்- Islamization of human Knowledge, சமகாலப்படுத்தல்- relavantization, முதலான சொற்பிரயோகங்களால் இக் கொள்கை நவீன காலத்தில் அறிமுகமாகியுள்ளது. இத்தகைய சொற்பிரயோகங்களுக்கிடையில் மிக நுணுக்கமான வித்தியாசங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

1960களில் நகீப் அத்தாஸ் இஸ்லாமிய மயப்படுத்தல்- Isalmization என்ற சொற் பிரயோகத்தையும் அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் Islamization of Knowledge- என்பதை இஸ்மாஈல் பாரூகி தனது ஆக்கங்களில பயன்படுத்தி வந்திருப்பதோடு, மனித அறிவை அல்லது சமகால அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல், Islamization of human Knowledge என்பதை பேராசிரியர் கமால் ஹஸன்[10] அதிகமாகப் பயன்படுத்துவார்.

பல்வேறு சொற் பிரயோகங்கள் இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற சிந்தனையை குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டாலும் ''சமகால அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்'' என்று குறிப்பிடுவது எல்லாவகையிலும் பொருத்தமானது எனக் கருதலாம். ஏனெனில் அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் எனும போது- பொதுவாக அனைத்து வகையான அறிவையும் குறிக்கும் வஹியுடைய அறிவும் அதனுள் உள்ளடக்கப்படும் என்பது போன்ற மயக்கங்கள் இருப்பதனால் சமகால அறிவு அல்லது மனித அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் என்று குறிப்பிடுவது பொருத்தமானதே.[11] எனவேதான் இஸ்லாமிய மயப்படுத்தல் என்பதை விளக்கும் நகீப் அத்தாஸ் முஸ்லிமின் சிந்தனைக்குள் புகுந்திருக்கும் மேற்கத்தேய செல்வாக்கை விடுவித்து (Liberation process- இஸ்லாமிய அடிப்படைகளை புகுத்துவதை - Infusion process - இஸ்லாமிய மயப்படுத்தலின் வேலைத்திட்டமாக விளக்குகிறார்.[12]

இந்த வகையில் முஸ்லிமின் சிந்தனையை ஆக்கிரமித்துள்ள இஸ்லாத்துக்கு ஒவ்வாத கொள்கை கோட்பாடுகளை விட்டும் அவனது அறிவை விடுவித்து, இஸ்லாத்தின் தூய சிந்தனைகளை அவனில் விதைப்பதற்கூடாக இன்றைய முஸ்லிம் உலகு எதிர்கொள்ளும் சவால்கள், சிக்கல்களுக்கு தீர்வு காண்பதே இஸ்லாமிய மயப்படுத்தல் நிகழ்ச்சி நிரலின் உயரிய இலக்காகும்.

**முடிவுரை**

மனித அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் அல்லது சமகால அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற நிகழ்ச்சி நிரல் முஸ்லிமின் சிந்தனைச் சிக்கலுக்கு தீர்வுத் திட்டமாக முன்வைக்கப்பட்ட போதிலும், வெறுமனே அறிவு, கல்வி சார்ந்த நிகழ்ச்சி நிரலோடு மாத்திரம் அக் கொள்கை குறுகியதாக இருக்க மாட்டாது. மாற்றமாக முதன்மைப் பிரச்சினையாக முஸ்லிமின் சிந்தனையிலுள்ள கோளாறுகளை இனங்கண்டு, அவற்றிற்கு இஸ்லாமியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுகளை முன்வைப்பதானது, வாழ்வின் ஏனைய சிக்கல்களுக்கும் தீர்வாக அமைகிறது. மனித அறிவில் ஏற்படும் கோளாறு முழு வாழ்வையும் பாதிக்கும் என்பது மிகத் தெளிவான உண்மை. இந்தப் பின்னணியில்தான் இக்கொளகை முதன்மை நிகழ்ச்சி நிரலாக பார்க்கப்பட வேண்டும் என்ற விவாதங்கள முன்னெடுக் கப்பட்டன. மனித அறிவை இஸ்லாமிய மயப்படுத்தலுக்கான முறைமைகள், அதன் எல்லைகள், இலக்குகள் குறித்த ஆய்வுகளும் விரிவாக சமகால உலகில் இத்துறை சார்ந்தவர்களால் முன்வைக் கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்சி நிரல் ஏனைய இஸ்லாமிய ரீதியான பணிகள், எழுச்சித் திட்டங்கள் என்பவற்றை ஓரங்கட்டுவதாகவோ அல்லது குறை மதிப்பீடு செய்வதாகவோ இருக்க மாட்டாது. மாறாக சம காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆக்க பூர்வமான இஸ்லாமிய எழுச்சிப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஒரு வேலைத் திட்டமாகவே இஸ்லாமிய மயப்படுத்தல் இயக்கம் செயற்படுகிறது.

## அடிக்குறிப்பும் உசாத்துணைகளும

1. பேராசிரியர் இஸ்மாஈல் ராஜி பாரூகி (1921-1986) பலஸ்தீனில் பிறந்தார். மேற்கத்தேய தத்துவஞானத்தில் தன்னுடைய முதுமானிப் பட்டத்தை ஹாவோட் பல்கலைக்கழகத்தி லும், அதே துறையில் கலாநிதிப் பட்டத்தை இந்தியானா பல்கலைக்கழத்திலும் பெற்றார்.
2. பேராசிரியர் ஸெய்யித் முஹம்மத் நகீப் அத்தாஸ் (1931பிறப்பு) மலேசியாவைச் சேர்ந்த ஒரு தத்துவஞானி, அவர் தன்னுடைய கலாநிதிப் பட்டத்தை தத்துவத் துறையில் லண்டன பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.
3. டன்ஜுமா ஏ மைவாதா, Islamization of Knowledge background and scope அமெரிக்க ஜேர்னல் ஒப் இஸ்லமிக் சோஸியல் ஸயன்ஸஸ் , இதழ் 14. 1997
4. ஸெய்யித் முஹம்மத் நகப் அத்தாஸ், Islam and seularism, பதிப்பகம்: இஸ்லமிக் யூத் மூமன்ட் ஒப் மலேசியா, 1978, பக்கம் 127
5. முஹம்மத் அஸ்லம் ஹனீபா A critical survay of Islamization of knowledge - IIUM பதிப்பு, 2009, பக்கம் 11
6. முஹம்மத் அஸ்லம் ஹனீபா, பக்கம் 12
7. இஸ்மாஈல் பாரூகி, Islamization of knowledge; Genaral principles and work plan, பக்கம் 42
8. நகப் அத்தாஸ், Islam and Secularism, பக் 130
9. அம்பர் ஹக் Muslim and Islamization in North America Problems and prospects, அமானா பப்லிகேஷன், கோலாலம்பூர், 1999, பக்கம் -51
10. பேராசிரியர் முஹம்மத் கமால் ஹஸன் (1942 பிறப்பு மலேஷிய கல்விமான். இஸ்லாமிய கற்கைகளில் தன்னுடைய முதுமானி, கலாநிதிப் பட்டங்களை நிவ்யோர்க் கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார். இவர் இஸ்லாமியக் கலைகளான தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ் முதலானவற்றை- இஸ்லாமிய மயப்படுத்தல் என்பது குறிக்காது என்றும், அவற்றை சமகால தேவைகுளுக்கு ஏற்ப முன்வைத்தல் relavantization என்ற கொள்கை குறித்து கூடிய கவனம் செலுத்தி வருகிறார்.
11. ரோஷ்னானி ஹாஷிம், இம்ரான் ருஷ்தி Islamization of knowledge; A Comperative Gnalysis of the conception of Al- Attas and Al- Faruqi"- இன்டலெக் ஷுவல் டிஸ்கோஸ், 8, (2000) பக்கம்-20
12. அத்தாஸ், Islam and secularism, பக்கம 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I தெளிவு III

# உடன்பாட்டுச் சிந்தனைக்கு வலுவூட்டும் நம்பிக்கைக் கோட்பாடு- இறை நியதி

அஷ்ஷெய்க் எச்.ஐ. கைருல்பஷர் B.A.(Hons) M.A (Sudan)

**இறை நியதி பற்றிய நம்பிக்கை**

ஈமானின் ஆறு அடிப்படை அம்சங்களில் 'தக்தீர்' என்னும் இறை நியதி (Fate and Destiny) பற்றிய விடயம் ஆழம் காண முடியாத சமுத்திரம் போன்றது. இந் நம்பிக்கை யதார்த்தத்தில் விசுவாசக் கோட்பாடின் முதல் அடிப்படையான இறை நம்பிக்கை யோடு இரண்டரக் கலந்தது. இதற்குப் பின்னால் உள்ள இரகசியங்களை தேடு வதற்கான அனைத்துப் பிரயத்தனங் களும் பலனற்றவை. சிந்திக்கும் ஆற்றல் மனிதனுக்குள்ள சிறப்புப் பண்பாயினும் பகுத்தறிவின் எல்லை வரையறுக்கப் பட்டது. பிரபஞ்ச செய்றபாட்டுக்குப் பின்னால் உள்ள தெய்வீக அறிவை(Divine Knowledge) வரையறுக் கப்பட்ட பகுத்தறிவாற்றலால் விளங்க முடியாது. சுருங்கக் கூறின் இறை நியதி தொடர்பான விடயத்தில் மனிதன் மேற்கொள்ளும் அனைத்து ஆய்வு முயற்சிகளும் முடிவாக அவனை வழிகேட்டின் பக்கம் இட்டுச் செல்லும் என்பது சந்தேகமற்றது.

''உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அறிவு மிகச் சொற்பமேயன்றி வேறில்லை'' (17:85) என்ற அல்குர்ஆன் வசனம் மனித அறிவு சமுத்திரம் போன்ற தூய இறை ஞானத்துடன் (Divine Wisdom) ஒப்பிடும் போது ஒரு துளியளவு பெறுமானதைக் கூடப் பெறுவதில்லை. உண்மையில் வரைய றுக்கப்பட்ட அறிவு கொடுக்கப்பட் டுள்ள மனிதனுக்கு, அல்லாஹ் திரைக் குப் பின்னால் பல விடயங்களை மறைத்து வைத்துள்ளமை அவனது கிருபையாகும். இது விடயத்தில் மனிதனுக்குள்ள கடப்பாடு அல்லாஹ்வை விசுவாசிப்பது போன்று, பிரபஞ்சப் பொருட்கள், சிருஷ்டிகள் அனைத்திலும் அல்லாஹ்வின் நியதி, நிர்ணயத்தை ஏற்றுக் கொள்வதோடு தான் மாத்திரம் இதற்கு விதிவிலக்கானவனல்ல என்பதையும் உறுதியாக நம்புவதாகும்.

எதிரும் புதிருமான நிகழ்வுகளைக் கொண்ட, கொந்தளிக்கும் சமுத்திரம் போன்றது மனித வாழ்வு. இதில் மனிதன் அடையப் பெறும் மகத்தான செல்வம் மன அமைதி (Peace of Mind) ஆகும்.[(1)] இப் பாக்கியத்தைப் பெற்றவன் உலகில் எதையும் இழந்தவனுமல்லன் . இப்பாக்கியத்தைப் பெறாதவன் உலகில் எதையும் அடைந்தவனுமல்லன். இக் கண்ணோட்டத்தில் இறை நியதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான சில உண்மைகள் குறிப்பாக, ஓர் இறை விசுவாசி, வாழ்வில் மன சாந்தி பெறுவதற்கான அநுகூலங்களைக் கொண்டுள்ளன. அவற்றைப் பற்றிய சிந்தனை அவனுக்குத் தடுக்கப்படவில்லை. ஏனெனில், இதனூடாக அவன் உடன்பாடான முறையில் சிந்தித்து, தனது குறைந்த அறிவால் தனது ஈமானை பலப்படுத்திக் கொள்கிறான். இன்பத்தில் நன்றியும், துன்பத்தில் பொறுமையுமுள்ள உண்மையான இறையடியானாக வாழவும் மறுமையின் ஈடேற்றத்தைப் பெறவும் இது வழி வகுக்கின்றது.

இறை நியதியை வாழ்க்கையின் தலை விதியாகக் கொண்டு நொந்து கொள்ளாமல் அந் நம்பிக்கையினூடாகப் பெறப்படும் அநுகூலங்கள் (Advantages) வாழ்க்கையின் உள, உடல், ஆன்மாவின் மேம்பாட்டுக்கும் ஆரோக்கியத்துக்கும் வழிகோலும் என்பதால் தத்துவார்த்தமாக அவற்றை விளங்கிக் கொள்வது எமது தவிர்க்க முடியாத தேவையாகும். அவற்றை இவ்வாறு வகைப்படுத்தலாம்.

**(1) இறை நியதி- முன்கூட்டிய பதிவு**

இறை நியதி என்பதன் பொருள் வாழ்வின் அனைத்து நிகழ்வுகளும் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டன என்ற உண்மையை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதாகும். வாழ்வில் நிகழ்ந்தவை அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டத்துக் உட்பட்டவை. தவிர நடக்கப்போகின்றவை மனித அறிவுக்கு அப்பாற்பட்டவை. அனைத்தையும் அல்லாஹ் எப்போதோ நிர்ணயித்து விட்டான். அல்லாஹ்வின் நாட்டத்தில் இருப்பவை 'கத்ர்' என்றும், அவை நடந்து முடிந்த பின்னர் 'கழா' என்றும் அழைக்கப்படும். ஆக, 'கழா கத்ருஹு' அவனுடைய ஏற்பாடு அல்லது நாட்டம் நிகழ்ந்து விட்டது என்பது இதன் பொருளாகும்.

நடந்தவை, நடக்கப் போகின்றவை அனைத்தும் எப்போதோ நிர்ணயிக்கப்பட்டவை என்ற வலுவான நம்பிக்கை, இறை நாட்டம் மனித நாட்டத்தை மிகைத்தது என்பதை மனிதனுக்கு உணர வைக்கின்றது. தவிர, இவ்வுணர்வு அல்லாஹ்வின் நாட்டம் தனது விருப்பத்துக்கு எதிர்மறையாக இருப்பினும் முழுமையாக அதை பொருந்திக் கொள்ளும் மனப்பாங்கை அவனிடம் வளர்க்கின்றது. தனது பலவீனத்தை ஏற்றுக்கொள்பவன் மறுபக்கம் தன் இரட்சகனின் ஆற்றலையும் அதிகாரத்தையும் அங்கீகரிக்கின்றான். இவை இரண்டும் பதட்டத்திலும் கலக்கத்திலும் மனித உள்ளத்தை ஆற்றுப்படுத்தி அமைதி அடையச் செய்கின்றன. தனது இயலாமைக்கு உட்பட்ட ஒரு விடயத்தில் கவலைப்படுவதை அவன் அறியாமையாகக் கருதுகிறான்.

அல்லாஹ்வின் முழுமையான இரட்சகத் தன்மைக்கு மனிதன் வழங்கும் அங்கீகாரம் அவனது ஈமானின் உயிரோட்டத்தை பிரதிபலிக்கின்றது. இதை நபி (ஸல்) அவர்கள் 'ஸஃகுல ஈமான்' (ஈமானின் சுவை) என அடையாளப் படுத்தி இவ்வாறு பிரஸ்தாபித்தார்கள்:

''யார் அல்லாஹ்வை (தன்) இரட்சகனாகவும், இஸ்லாத்தை (வழிகாட்டும் தனது) மார்க்கமாகவும், முஹம்மது நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதராகவும் பொருந்திக கொண்டானோ அவன் ஈமானின் சுவையை நுகர்ந்து விட்டான்.'' (முஸ்லிம்)

அல்லாஹ்வின் விருப்பத்துக்கு முற்றிலும் வழிப்பட்ட இத்தகைய பலமான ஈமானைப் பெற்ற நபித் தோழர்களை இறைவன், ''அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான்.'' (98:8) என வியந்து போற்றுகிறான். பொருந்திக் கொள்ளல் என்ற கருத்தைத் தரும் 'அர்-ரிழா' என்ற அரபுப் பதம் முழுமையான மன விருப்பத்தைச் சுட்டுகின்ற பிரயோகமாகும்.(2)

சுய விருப்பத் தேர்வும செயல்பாட்டுச் சுதந்திரமும் மனிதனுக்கு உண்டு. நன்மையை ஏவி, தீமையை தடுக்கவும், தீங்கை அகற்றவும் செயல்படுவதை இஸ்லாத்தின் போதனைகள் தூண்டுகின்றன. எனவே, அல்லாஹ்வின் தீர்ப்பைப் பொருந்திக் கொள்வதை மனித செயற்பாட்டுக்கு முரண்பட்டதாகக் கருதுவது பிழையான சிந்தனையாகும். நோய்க்கு மருத்துவம் செய்வதை இறை நியதிக்கும் இறை திருப்திக்கும் முரண்பட்ட செயற்பாடாகக் கருதிய நெறிபிறழ்ந்த ஸுூ.ஃ.பிகளின் நிலைப்பாடு இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இங்கு வலியுறுத்தப்படுகின்ற முக்கிய விடயம் தனக்கு எது நடப்பினும் அதை எப்படி நோக்க வேண்டும் என்பதை மனிதன் கற்றுக்கொள்ள வைப்பதாகும். மேலும், தனக்கு ஏற்பட்ட கதியை விதியாகப் பார்த்து அல்லது விதியை கதியாக எண்ணி மனம் நோகாமல இறை விருப்பத்தை பூரணமாக பொருந்துவதினூடாக மனதை ஆற்றுப்படுத்துவதாகும்.

**வரலாற்றில் ஓர் உதாரணம்**

''வானங்கள், பூமி இரண்டையும் படைப்பதற்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிருஷ்டிகளின் நியமங்களை அல்லாஹ் நிர்ணயித்து விட்டான்'' (முஸ்லிம்) என ஒவ்வொரு சிருஷ்டியின் முன்னளப்பு பற்றி நபி (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள். ஒரு முஸ்லிம் இறை நியதியை பகுத்தறிவு ரீதியாக எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்ற படிப்பினை மேற்குறிப்பிட்ட நபி மொழி வலியுறுத்தும் ஒரு பொது உண்மையாகும்- இவ்வுண்மையை சரியாக விளங்குவது உளத்திருப்திக்கும் மன அமைதிக்கும் உத்தரவாதமாகும். வானம், பூமியின் அனைத்து நிகழ்வுகளும் 'லவ்ஹுல் மஹ்பூள்' ஏட்டில் முன்கூட்டியே பதியப்பட்டவை என்பதை அல்லாஹ் அல்குர்ஆனின் பின்வரும் வசனத்தில் குறிப்பிட்டு அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதே என்றும் தன் வல்லமையை வெளிப்படுத்துகிறான்: தான்நாடிய ஒருவிடயத்தில் அல்லாஹ்வின் நாட்டம் எதிர்மறையாக அமைந்து விட்டால் அடியான் அதைப் பொருந்திக் கொண்டு பொறுமையோடு, அதற்குப் பரிகாரம் தேடும் அடுத்த மறு செயற்பாட்டில் இறங்க வேண்டும், அல்லாஹ்வின் ஒரு விதியை அல்லாஹ்வின் மற்றொரு விதியால் வெல்லப் பார்க்க வேண்டும். கொலரா, வாந்தி பேதி நோய் ஏற்பட்ட ஒரு பிரதேசத்தில் இருந்து சில தோழர்களை உமர் (ரழி) அவர்கள் மற்றொரு பிரதேசத்துக்கு நகருமாறு ஏவினார்கள். இதை ஸஹாபாக்கள் வியப்போடு நோக்கினர். அதற்கு உமர் (ரழி) அவர்கள் ''அல்லாஹ்வின் ஒரு ஏற்பாட்டில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு ஏற்பாட்டுக்கு விரண்டு செல்லுங்கள்" எனக் கூறினார்கள்.[3]

''பூமியிலோ அல்லது உங்களிலோ சம்பவிக்கின்ற எந்த நிகழ்வும், அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்பூள்) ஏட்டில் இல்லாம லில்லை. நிச்சயமாக அது அல்லாஹ் வுக்கு எளிதானதே ஆகும்." (57:22)

இவ்வாறு மனிதனைப் பார்த்து அல்லாஹ் அவனது நுணுக்கமான ஏற்பாடு பற்றி எடுத்துரைப்பதற்குக் காரணம் யாது என்பதை மேலுள்ள வசனத்தை அடுத்துவரும் வசனத்தில் தெளிவாக இயம்புகிறான்: ''உங்களை விட்டுத் தவறிப்போன ஒன்றின் மீது நீங்கள் துக்கப்படாமல் இருக்கவும், அவன் உங்களுக்கு அளித்தவற்றின் மீது நீங்கள் (அதிகம்) மகிழாதிருக்கவும் (இதனை உங்களுக்கு அல்லாஹ் அறிவிக்கிறான்." (57:23)

அல் குர்ஆனின் இவ்வசனத்துக்கு விளக்கம் தரும் இமாம் அல் குர்தூபி (ரஹ்) அவர்கள் பின்வரும் வரலாற்று நிகழ்வை எமக்குப் படிப்பினைக்காக முன்வைக்கிறார்: ''ஸஃத் இப்னு ஜுபைர் (ரஹ்) அவர் களை கொடுங்கோலன் ஹஜ்ஜாஜ் கைது செய்தபோது, அர்ரபீஃ இப்னு ஸாலிஹ் (ரஹ்) அவர்கள் கதறி அழுதார்கள். அப்போது ஸஃத் (ரழி) ''எதற்காக அழுகிறீர்" எனக் கேட்க, ''உங்களுக்கு ஏற்பட்டுள்ள தையும் ஏற்படப் போகின்ற விதியையும் எண்ணி அழுகிறேன்." என்றார். ''இது எனக்கு ஏற்படும் என அல்லாஹ் விதித் துள்ளான் எனின் அழாதீர்கள். அல்லாஹ் என்ன கூறுகிறான் என்பதை நீர் செவியேற்றதில்லையா?" எனப் பகர்ந்துவிட்டு ஸஃத் (ரழி) அவர்கள் மேலே குறிப்பிட்ட அல்குர்ஆன் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.[4]

## (2) நிர்ணயிக்கப்பட்டவை நிகழ்ந்தே ஆகும்

தன்னைத் தொட்ட ஒரு துன்பத் தைத் தன்னால் தடுத்திருக்க முடியாது. முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட துன்பத்தையன்றி எத்தகைய தீங்கும் தன்னை தொட்டிருக்கவும் முடியாது. மனிதன் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளும்போது மனக்கவலைகள் பாரியளவு குறைகின்றன. ஆத்ம திருப்தியும் ஆனந்தமும் அவன் உள்ளத்தை நிரப்புகின்றன. மாத்திர மன்றி சர்வ வல்லமை மிக்க அல்லாஹ் வுடன் ஒரு தனித் தொடர்பை தான் பெற்ற உணர்வையும் அவன் அடைகி றான். இது பின்வரும் அல்குர்ஆன் வசனத்தில் இப்படி பிரஸ்தாபிக்கப் படுகின்றது:

''நிகழும் துன்பம் எதுவும் அல்லாஹ்வின் அனுமதியின் பேரில் நிகழ்வதேயன்றி வேறில்லை. மேலும் எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ, அவருடைய இருத யத்தை அவன் நேர்வழியில் செலுத்து கிறான். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிந்தவன்" (64:11)

இமாம் அல்- குர்துபி (ரஹ்) அவர்கள், இவ்வசனத்துக்கு விளக்கம் தரும்போது, ''அல்லாஹ்வின் அனுமதி யின் பேரில்" என்ற தொடரை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் இப்படி வியாக்கி யானப்படுத்துவதாகக் குறிப்பிடுகின் றார்கள்: ''தனக்கு ஏற்பட்ட கதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் தவிர்த்திருக்க முடியாது. தனக்கு ஏற்படாமல் போன ஒரு கதி என்ற திடமான தன்னைப் பாதித்திருக்க வும் முடியாது. நம்பிக்கையால அல்லாஹ் அடியானின் உள்ளத்தை நிரப்பிவிடுகிறான்"[5]

மேலே சுட்டிக்காட்டிய அல்குர்ஆன் வசனத்துக்கு இறைதூதர் (ஸல்) அவாகள் இப்படிக் கூறி வலுவூட்டுகின்றார்கள்: ''அறிந்துகொள்ளுங்கள்! உங்களுக்கு ஏற்படாமல் போனவை உங்களைப் பாதித்திருக்க முடியாது. உங்களைப் பாதித்தவை உங்களுக்கு ஏற்படாமல் போயிருக்கவும் முடியாது.''[6] (அஹ்மத்)

''இதன் பொருள் உங்களைத் தொட்டவை அல்லது தொடாமல் போனவை அவை நல்லதோ தீயதோ ஏற்கனவே முன்கூட்டி நிர்ணயிக்கப் பட்டதாகும். அதாவது, உங்களுக்கு நிகழ்ந்த துன்பம் எதுவாயினும் அது உங்களுக்கு நிகழ்ந்தே ஆகும் என்பது தவிர்க்க முடியாதது. மேலும் எத்தகைய துன்பமும் உங்களை அணுகாமல் நீங்கள் அனுபவித்த பாதுகாப்பும் அவ்வாறே தவிர்க்க முடியாதது. அனைத்தும் மிக நீண்ட காலத்துக்கு முன்னரே நிர்ணயிக் கப்பட்டவை. அவை நிச்சயம் நிகழ்ந்தே ஆகும்" இவ்வாறு இமாம் அல்- ஹைதமி (ரஹ்) விளக்கம் தருகிறார்.[7]

எனவே பலமான இறை நம்பிக் கையை அடியொட்டிய மன அமைதியால் நிறைந்த உள்ளம் நிராசை, விரக்தி, கவலைகளால் ஒருபோதும் பாதிக்கப்படாது.

### (3) நன்மை இறை நாட்டம் தீமை மனித இயல்பு

இறை நியதி தொடர்பான விடயத் தில் மனிதனால் உணரப்பட வேண்டிய ஓர் அடிப்படை உண்மையாக இதைக் குறிப்பிடலாம். மனிதன் எதிர்மறையாக சிந்தித்தாலும், இறை நியதிப்படி நடந்து முடிந்த அனைத்து அம்சங்களிலும் நன்மை உண்டு. பிரபஞ்சம் முழுமை யான தெய்வீக நியதியின் பிரகாரம் இயங்கும் போது அனைத்து செயற்பாடு களும் நன்மைக்குரியதாகும். மனிதனின் வெளிப்பார்வைக்கு தீமை எனத் தோன்றினாலும் தூய்மையான அளவுகோல் மூலம் அளக்கப்பட்டவை ஒருபோதும் தீமையாக இருக்காது.

இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை அல்லாஹ்வின் மேலாதிக்கத் துக்கு(Supreme Sovereignty) ஆதாரமா கக் குறிப்பிட்டு விளக்கம் தருகிறார். ''(நபியே!) நீர் கூறுவீராக: ''அல்லாஹ்வே! ஆட்சிகளுக்கெல்லாம் அதிபதியே! நீ யாரை விரும்புகிறாயோ அவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய். இன்னும் ஆட்சியை நீ விரும்புவோரிடமிருந்து அகற்றியும் விடுகின்றாய். நீ நாடியோரை கண்ணியப்படுத்துகின்றாய். நீ நாடிய வரை இழிவுபடுத்தவும் செய்கின்றாய். நன்மைகள்யாவும் உன் கைவசமே உள்ளன. அனைத்துப் பொருட்கள் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவ னாக இருக்கின்றாய் (03:26)

'' மேலாதிக்கம் தனக்கு மாத்திரமே உரித்து என்பதைப் பலமாக உறுதிப் படுத்தி அல்லாஹு தஆலா மேற்குறித்த வசனத்தை ஆரம்பிக்கிறான். தான் நாடுகின்றவருக்கு ஆளும் அதிகாரத்தை அளிப்பவனும் அவனே. தான் நாடுகின்றவரிடமிருந்து அதிகாரத்தை பறிப்பவனும் அவனே. அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வசனம், அல்லாஹ்வின் முழுமையான வல்லமையையும், அனைத்து சிருஷ்டிகளின் விவகாரங்களையும் கட்டுப்படுத்தும் அவனது நாட்ட சக்தியையும் (Will power) துல்லியமாகப் புலப்படுத்துகின்றது. அனைத்துக்கும் மேலாக அல்லாஹ்வின் நியதிப் பிரகாரம் நிகழும் அனைத்தும் நன்மையே என்ற விடயத்தை இவ்வசனம் வலியுறுத்தி நிற்கின்றது."

''எனவே, அல்லாஹ் சிலரிடமிருந்து அதிகாரத்தை அகற்றி அவர்களைத் தாழ்த்துகிறான் என்றால் அது ஒரு நியாயமான காரணிக்காக அன்றி வேறில்லை. அல்லாஹ்வின் நாட்டம் நீதி, கருணை, தீட்சண்யம், பொது நலன் ஆகியவற்றை நிச்சயப்படுத்தக் கூடியது. இயல்பாகவே அது நன்மையானது. அதற்காக நாம் அவனைப் புகழ்ந்து அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இது விடயத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை நாம் ஒழுக வேண்டும். அவர்கள் தொழுகைக்காக நிற்கும் போது இவ்வாறு பிரஸ்தாபித்து அல்லாஹ்வைப் புகழக் கூடியவராக இருந்தார்கள்:

''ஓ இறைவா! நான் உன் சமுகம் ஆஜராகி உள்ளேன். உன்னை வணங்கி வழிபடத் தயாராக இருக்கிறேன். நன்மை உன் கைவசம் உள்ளது. தீமை உன்னைச் சார்ந்ததல்ல. நான் உன்னைச் சார்ந்த உனது அடியான், உன் பக்கம் மீளக்கூடியவன். நீ மிகத் தூய்மையானவன். உயர்ந்தவன்." நபிகளாரின் இப் பிரார்த்தனை மூலம் அல்லாஹ் அவனது மேன்மை, பரிசுத்தத்தன்மை காரணமாக அனைத்து வகை தீமைகளில் இருந்தும் மிகத் தூரமானவன் என்பதை அறிந்து கொள்கிறோம். அல்லாஹ்வுக்குரியது என வர்ணிக்கப்படும் எதுவும் நன்மையாகவே இருக்க வேண்டும். தீமை, அது தீமை எனக் கருதப்படுவதற்கே காரணம் அது அல்லாஹ்வுக்குரியதாக வர்ணிக்கப் படாதமையாகும். இல்லையெனில், அது மாட்டாது. அல்லாஹ் நன்மை, தீமை இரண்டையும் படைத்திருக்கிறான். ''ஆனால், இதன் ஏக பொருள் தீமை அல்லாஹ்வின் படைப்பில் ஒரு பாகம்; அது அவன் செயற்பாடுகளில் உள்ளதல்ல என்பதாகும்.

ஆகவேதான், மேலானவன் அல்லாஹ் அனைத்துவகை அநீதியிலிருந்தும் முற்றிலும நீங்கியவனாவான். ஏனெனில் அநீதி மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்து நியாயமற்ற அனுசரிப்பாகும் (Unfair Treatment). அல்லாஹ் யாரையும் நியாயமற்ற விதத்தில் அனுசரிப்பதில்லை. அல்லாஹ்வின் புறமிருந்து வரும் அனைத்தும் நன்மையே.

## இறை அருளை உணர்த்தல்

உடன்பாடு, எதிர்மறை இரண்டு நிகழ்வுகளிலும் அடியானுக்கு நன்மை உண்டு. ஏனெனில், அவன் இன்பம், துன்பம் இரண்டிலும் அல்லாஹ்வின் அருளை உணர்கிறான். ''எனது உலக விவகாரங்களில் எனக்கு ஏற்படும் ஒரு துன்பத்தில் அல்லாஹ்வுடைய மூன்று அருள்களைப் பார்க்கிறேன்."

1. அது எனது மார்க்க விவகாரத்தில் ஏற்படாமை
2. அது அதைவிடப் பெரிதாக அமையாமை
3. அதற்கான அல்லாஹ்வின் வெகுமதியை நாடி நிற்றல் . இவ்வாறு ஸல.்புகளில் ஒருவர் கூறுகிறார்(9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அருள்கள் அடியானின் உலக விவகாரங்களில் நிகழும் அனைத்து சோதனைகளையும் உள்ளடக்கியது. அல்லாஹ்வின் தீர்ப்பை பொருந்திக் கொள்ளல், அவனது சோதனைகளை சகித்துக் கொள்ளல் என்ற தேவைக்கு மேலாக இது ஒரு விசுவாசியிடம் அல்லாஹ்வுக் குரிய தனது நன்றி உணர்வை வெளிப் படுத்த மிகப பொருத்தமானது.

மனிதனின் உலக விவகாரங்களி லான இழப்பு அதைவிடச் சிறந்த ஒன்றால் ஈடு செய்யப்படலாம். ஆனால் மார்க்க விவகாரம் ஒன்றில் ஏற்படும் இழப்பு ஈடு செய்யப்பட முடியாதது. பாவத்துக் கும் சிறை வாழ்க்கைக்கும் இடையில் தெரிவு கொடுக்கப்பட்ட நபி யூஸுப் (அலை) அவர்கள் சிறை வாழ்வை தெரிவு செய்தபோது ''என இறைவனே! இவர்கள் என்னை எதன் பக்கம அழைக்கி றார்களோ அதை விடச் சிறைகூடமே எனக்கு அதிகம் விருப்ப முடையதாகும்.'' எனக் கூறினார்கள். தன்னால் ஈடுசெய்ய முடியாததை அவர்கள் தெரிவு செய்தார்கள்.

''இறைவா! நீ எமது மார்க்கத்தில் எமக்கு சோதனைகளை ஏற்படுத்தி விடாதே! உலக வாழ்வை எமது பெரிய கவலையாகவும் எமது அறிவின் இறுதி இலக்காகவும் ஆக்கிவிடாதே'' (திர்மிதி,அல் ஹாகிம்) இறுதித் தூதர் (ஸல்) அவர்கள் சமூகத்துக்குக் கற்றுக் கொடுத்த இப் பிரார்த்தனை படிப்பினை ஊட்டப் போதுமானது. [10]

## (4) இறை நியதியின் அடிப்படைகள்

இறை நியதி அல்லாஹ்வுக்கே உரித்தான இரு பண்புகளை அடிபபடை யாகக் கொண்டது. அவை முழுமையான நீதி (Perfect Justice), பூரணத்துவமான அறிவு (Comrehensive Knowledge) இரண்டுமாகும்[11] எனவேதான அல்லாஹ் தன்னைப் பற்றி இவ்வாறு பிரஸ்தா பிக்கிறான்: ''அவன் செய்பவை பற்றி எவரும் அவனைக் கேட்க முடியாது. ஆனால், அவர்கள் தாம் (அவர்கள் செய்யும் செயல்கள் பற்றி) கேட்கப் படுவார்கள்.

பரிசுத்த அல்குர்ஆனில் அதிகமான வசனங்கள் இவ்விடயம் தொடர்பாக அலசுகின்றன. அவற்றில் சிலவற்றை மாத்திரம் இங்கு சுட்டிக்காட்டலாம்:

''நிச்சயமாக அல்லாஹ் (எவருக்கும்) ஓர் அணுவளவு கூட அநியாயம் செய்ய மாட்டான். (ஓர் அணுவளவு) நன்மை செய்யப்பட்டிருந்தாலும் அதனை இரட்டித்து அதற்கு மகத்தான நற்கூலியை தன்னிடத்திலிருந்து (அல்லாஹ்) வழங்குகிறான்.'' (4:40)

''உம்முடைய இறைவன் ஒருவருககும் அநியாயம் செய்யமாட்டான்.'' (18:49)

''உம்முடைய இறைவன் (தன்) அடியார்களுக்குச் சிறிதும் அநியாயம் செய்பவன் அல்லன்.'' (41:46)

மேற் சொல்லப்பட்ட வசனங்கள் யாவும் அல்லாஹ்வின் முழுமையான நீதி என்ற பண்பை உறுதிப்படுத்துகின்றன.

அல்லாஹ்வின் பூரணத்துவமான தெய்வீக அறிவு பற்றிப் பேசும அல்குர்ஆன் வசனங்களைப் பொறுத்தவரை ஸூரா யூனுஸில் பிரஸ்தாபிக்கப்படும் ஒரு வசனத்தைக் குறிப்பிடலாம். அல்லாஹ் கூறுகிறான்:

''பூமியிலோ, வானத்திலோ உள்ள வற்றில் ஓர் அணுவளவும் (நபியே!) உம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்குத் (தெரியாமல்) மறைந்து விடுவதில்லை. இதை விடச் சிறியதாயினும் அல்லது பெரியதாயினும் விளக்கமான அவன் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை" (10:61)

இது குறித்துப் பேசும் மற்றொரு வசனம் ஸுரா அல் அன் ஆமில் இடம் பெற்றுள்ளது. அல்லாஹ் குறிப்பிடுகிறான்: ''அவனிடமே மறைவானவற்றின் திறவுகோல்கள் இருக்கின்றன. அவற்றை அவனன்றி எவரும் அறியார். மேலும் கரையிலும் கடலிலும் உள்ளவற்றை எல்லாம் அவன் அறிவான். அவன் அறியாமல் ஓர் இலையும உதிர்வதில்லை. பூமியின் ( ஆழத்தில் அடர்ந்த) இருள்களில் கிடக்கும் சிறு வித்தும் பசுமையானதும் உலர்ந்ததும் எந்தப் பொருளும் தெளிவான (அவனுடைய) பதிவேட்டில் இல்லாமலில்லை." (6:59)

எனவே சம்பூரணமான அறிவும், முழுமையான நீதியும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிய பண்புகள் என்பதை உணர்ந்து, பிரபஞ்சத்தை முழுமையான தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள அல்லாஹ்வுக்கு நாம் முற்றிலும் அடிபணிய வேண்டும். தவிர சர்ச்சை மிகுந்த இறை நியதி பற்றிய விசுவாசக் கோட்பாட்டை எப்படி நோக்க வேண்டும் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இல்லையெனின் அது எம்மை ஒரு சிக்கலான நிலைக்கு இட்டுச் சென்று மீள முடியாத அழிவில் தள்ளிவிடும். எமது வாழ்வில் மன அமைதியை உத்தரவாதப்படுத்த மேற்குறிப்பிடப்பட்ட உணர்வு (Realizatim) மிக அவசியமாகும்.

## உசாத்துணைக் குறிப்புக்கள்


1. பார்க்க: கலாநிதி யூஸுஃப் அல்- கர்ழாவி, அல் ஈமான்-வ அல்- ஹயாத், பக்கம் 86-87 (2006 பதிப்பு)
2. இமாம் அந்- நவவி, ஷரஹு ஸஹீஹ் முஸ்லிம்
3. அபூ உபைதா இப்னு அல் ஜர்ராஹ் : புகாரி
4. இமாம் அல்- குர்தூபி, அல் ஜாமிஉ லி அஹ்காம் அல்- குர்ஆன், பாகம் 17, பக்கம் 258.
5. Ibid, பாகம்: 18, பக்கம் 139
6. இமாம் அஹ்மத், முஸ்னத்
7. பத்ஹ் அல் முபீன் லி ஷரஹ் அல்- அர்கஈன், பக்கம்:176.
8. ஷிஃபா அல்- அலீல், பக்கம் 178-179
9. அல் ஈமான் வ அல் ஹயாத், பக்கம்:188
10. Idib, பக்கம்:188
11. Muhamad Mu"sa Al. Shareef, Self serenity


★ நான் மௌனமாக இருந்ததற்காக ஒருபோதும் கவலைப்படவில்லை. ஆனால் நான் பேசிய வார்த்தைகளுக்காக பலதடவை கைசேதப்பட்டுள்ளேன்.

★ வறுமை ஒரு மனிதனாக இருந்திருந்தால் அவனைக் கொன்றிருப்பேன்.

★ மூன்று விடயங்கள் உன் சகோதரனது உள்ளத்தில் உன் பால் அன்பை ஏற்படுத்தும்:

1. முதலில் ஸலாம் சொல்லுதல்
2. சபையில் அமர இடமளித்தல்
3. மிக விருப்பமான பெயரால் அழைத்தல்

– உமர் [ரழி]–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்ஹைப் புரிதலில் பதப் பிரயோகங்களின் வகிபாகம் vi

## அல்–மன்தூப்

- அஷ்ஷெய்க் எம். நவாஸ் ஸஹூர்தீன் நளீமி M.A. PGDE (Merit)

இஸ்லாமிய பிக்ஹைப் புரிதலில் ''அல்- மன்தூப்'' எனும் பிரயோகத்தின் முக்கியத்துவம் பற்றிய கருத்துக்களை உஸுல் நூல்களைப் படிக்கும் போது அவதானிக்க முடிகின்றது. இந்தப் பிரயோகத்துக்கு மிகப் பொருத்தமான வரைவிலக்கணத்தை தேடிப் பார்க்கின்ற போது ''அவசியம நிறைவேற்றப்பட வேண்டுமென்று வேண்டப்படாத அம்சங்களைக் குறிக்கும்'' என்ற வரைவிலக்கணமே மிகப் பொருத்தமானது போல் தோன்றுகின்றது. இமாம் கஸ்ஸாலி, இமாம் புகாரி, இமாம பைளாவி போன்றோர் இதனையே பொருத்த மானது எனக் கருதியிருக்கின்றனர்.

அல்லாஹ்வோ அல்லது இறைதூதர் (ஸல்) அவர்களோ கட்டாயம் நிறை வேற்ற வேண்டுமென்று வேண்டாத ஷரீஆ இபாதத்களாக கருதுகின்ற அம்சங்கள் இதில் அடங்கலாம். அல்-குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இதற்கான உதாரணங்கள் நிறையக் காணப்படு கின்றன. ஸுரா பகராவில் கடன் கொடுக்கும்போது எழுதிக் கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பது, வாஜிபைக் காட்டாது மாறாக ''விரும்பினால் எழுதிக் கொள்ளலாம் என்ற பொருளையே தரும். இந்த வசனத்தின் தொடர்ச்சியில் வரும் ''உங்களில் ஒருவரை ஒருவர் விசுவாசிப்பவராக இருந்தால் விசுவாசிப்பவர் தனது விசுவாசத்தை நிறைவேற்றட்டும்'' என்ற பிரயோகம் இக் கருத்தையே தருகின்றது என்று கலாநிதி ஸுஹைலி குறிப்பிடுகிறார். எனினும் இதுதொடர்பாக சட்ட அறிஞர் களுக்கிடையே நிலவும் அபிப்பிராய பேதங்களை சுருக்கமாக நோக்குவோம்:

''அல்- மன்தூப்'' என்பது விதிக்கப் பட்டதா? என்பதில் இரு வேறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. அது விதிக்கப்பட்ட அம்சங்களைக் குறிக்கும் என மாலிகி சிந்தனை மரபின ரும், ஷாபிகளில் அதிகமானோரும், ஹம்பலிகளும் கருதுகின்றனர். இமாம் ஆமிதி, இமாம் இப்னு குதாமா உள்ளிட்ட சட்ட அறிஞர்கள் இக்கருத்தை தமது நூல்களில் குறித்துள்ளனர். ''மன்தூப்'' என்பது ஏவப்பட்ட விடயங்களையே குறிக்கும். ஏனெனில் மன்தூபான விடயத்தை நிறைவேற்றல் என்பது கட்டுப்படுதல், அடிபணிதல் ஆகும். இது கட்டளையை நிறைவேற்றலின் பிரதிபலிப்பாகும். இவ்வகையில் நிறைவேற்றுவது ஒருவகையில் ''வாஜிப்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக அல்லது ''மன்தூப்'' ஆக அமைய முடியும், என அவர்கள் விளக்குகின்றனர்.

''மன்தூப்'' என்பது விதிக்கப்பட்ட கருமங்களல்ல என ஹனபிகளும், ஷாபிகளில் இமாம் இப்னுஸ ஸுப்கியும் குறிப்பிடுகின்றனர். நபி (ஸல்) அவர்கள் நேரடியாக கட்டளையிடாமல் சிலேடையாகச் கொன்னவற்றை இதில் அடக்கலாம் என்பது அவர்களது கருத்தாகும். இதற்கு ''எனது சமூகத் தினருக்கு சிரமமாக இருக்கும் என்று இல்லாவிட்டால் ஒவ்வொரு தொழுகை யின் போதும் பல்துலக்குமாறு ஏவி யிருப்பேன்.'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதை சான்றாகக் காட்டுகின்றனர். அவ்வாறே குறித்த விடயத்தை செய்யாது விடுவது குற்றமாக அமையும் எனக் கொள்ளத்தக்க அம்சங்களே விதிக்கப் பட்டனவாக இருக்க முடியும். மன்தூப் வகையில் வரும் எக்கருமத்தையும் விடுப வர் குற்றமிழைத்தவராகக் கொள்ளப்படு வதில்லை. இதுவும் அது விதிக்கப்பட்ட வற்றைக் குறிக்காது என்பதற்கு ஆதாரமாகும் எனக் குறிப்பிடுகின்றனர்.

இக் கருத்துக்கள் ''அல்- மன்தூப்'' எனும் பதப் பிரயோகமக் பற்றிய இரு வேறுபட்ட சிந்தனைகளைக் காட்டுகின் றன. இப்பின்னணியில் இருந்து அல்- மன்தூப் என்பதை பின்வருமாறு பகுத்து நோக்க முடியுமென ''கஷ்புல் அஸ்ரார்'' எனும் தூபில் இமாம் புஹாரியும் ''மிர்ஆதுல் உஸுல்'' எனும் நூலில் ஷெய்க் மன்லா ஹஸ்குவும குறிப்பிடுகின்றனர்.

1. கட்டாயம் நிறைவேற்றுமாறு வேண்டப்பட்டவை
2. அங்கீகரிக்கப்பட்டவை
3. மேலதிகக் கிரியைகள்

குறித்த கருமத்தை நிறைவேற்றி னால் நன்மையும் நிறைவேற்றாவிட் டால் தண்டனை வழங்கப்படாத ஆனால் கண்டிக்கத் தக்கதாகவும் அமையும் விடயங்கள் முதல் வகையில் அடங்கும். சமயக் கடமைகளைப் பரிபூரணமாக்கக் கூடிய கருமங்களும் (உதாரணம்: கூட்டுத் தொழுகை, அதான், இகாமத்) நபி (ஸல்) அவர்கள் எப்போதும் பேணி நிறைவேற்றிய, மிக அரிதாகவே நிறைவேற்றாத கருமங்களும் (வுர்வில் வாய் கொப்பளித்தலும், நாசிக்கு நீர் செலுத்தலும், பாதிஹா ஸூரா ஓதியதன் பிறகு தொழுகையில் வேறு ஸூரா ஓதுதல்) இப் பிரிவில் அடங்கும். இதனை நிறைவேற்றியவர் நன்மைகளைப் பெற்றுக்கொள்வர். நிறைவேற்றாதவர் தண்டனைக்குரிய வராகமாட்டார். எனினும் கண்டிப்புக்குரியவராகி விடுகி றார். குறித்த ஒரு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து இக் கருமங்களை நிறைவேற்றவில்லை எனில் அவர்கள் ஸுன்னாவை இழிவுபடுத்திய வர்கள் என்ற வகையில் கொலை செய்யப் பட வேண்டியவர்கள் என்பதே இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் கருத்தாகும்.

இரண்டாவது வகையை சட்ட அறிஞர்கள் ''மன்தூப் மஷ்ரூ·. பி·. லுஹு" எனக் குறிப்பர். நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்வில் தொடர்ந்து நிறைவேற்றாத அம்சங்கள் இப்பிரிவில் அடங்கும். இதனை நிறைவேற்றாத வர்கள் கண்டிப்புக் குரியவர்களாக அமைய மாட்டார்கள். முஸ்தஹப் வகை சார்ந்த சகல விடயங்களும் இப்பிரிவில அடங்கும்.

மூன்றாவது வகையை ''மன்தூப் ஸாஇத்'' என குறிப்பிடுகின்றனர். நபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஸல்) அவர்கள் தனது நாளாந்த வாழ்வில் கடைப்பிடித்தொழுகிய பொதுவான விடயங்கள் இப்பிரிவில் இடங்கும். உண்ணல், பருகல், உறங்குதல், நடத்தல், அணிதல் போன்ற சாதாரண விடயங்களில் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அவ்வாறே நடந்துகொள்வதை இப் பகுதி குறிக்கும். இவ்வாறு செய்யாதவர் கள் எல்லாவகைக் குற்றத்துக்கோ அல்லது கண்டிப்புக்கோ உரியவர்களாக இருக்க மாட்டார்கள். எனினும் இவ்வாறு செய்யும் ஒருவர் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றும் உணர்வோடு இருந்தால் அதற்கு கூலி கிடைக்கும்.

நாம் மேலே குறித்துக் காட்டிய வகையீடுகளையே பெரும்பாலான ஹனபிகள் சரியெனக் கொள்கின்றனர். எனினும் ஏனைய சட்ட மரபுகளைச் சேர்ந்தவர்கள் இதனை ஆதரிக்க வில்லை என்பதையே அவர்களது சட்ட நூல்கள் காட்டுகின்றன. இமாம் ஸுபுகி தனது ''அல்-இப்ஹாஜ்'' எனும் நூலிலும் இமாம் அல்-பனானி தனது ''ஷரஹுல் மஹல்லி''யிலும் ஷெய்க் இப்னுல் பத்ரான் தனது ''அல்-மத்ஹல் இபா மத்ஹபி அஹ்மத்'' எனும் நூலிலும் ''அல்- மன்தூப்'' எனும் பிரயோகத்தை ஸுன்னா, முஸ்தஹப், நாபிலா, ததவ்வு'., முரங்ஙப், பீய்ஹி, இஹ்ஸான் எனும் பதங்களால் குறிக்கின்றனர். இதில் வகையீடு அவசியமில்லை என்பது அவர்களது கருத்தாகும்.

நபிலான கருமங்கள் சட்ட அங்கீ காரம் பெற்றவையா? இல்லையா? என்பதில் இமாம்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதங்கள் நிலவுவதை நாம் மேலே குறித்துக் காட்டிய நூல்களைப் படிக்கும் போது காண முடிகின்றது. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் நபிலான விடயங்கள் சட்ட அங்கீகா ரம் பெற்றனவாக இருக்க வேண்டிய தில்லை என்கிறார். அதனை விட்டவர் குற்றமிழைத்தவராகக் கொள்ளப்பட மாட்டார். அதனை விட்டவருக்கு தண்டனை வழங்கும் வகையிலோ செய்தவருக்குக் கூலி வழங்கும் வகையிலோ அது விதிக்கப்படவில்லை. இப் பண்பில்தான் அது மார்க்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்றிருப்பின் அது சட்டமாக்கப்பட்ட பின்னரும் அதே பண்பிலேயே இருக்க வேண்டும். அது கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டியதாக அமைய முடியாது. ஒன்று சட்டமாக்கப்பட்டதன் பின்னர் அதன் அடிப்படை இயல்பு மாறாது. அடிப்படையில் ஒன்று நபிலாக இருந்தால் அதனை நிறைவேற்றினா லும் நிறைவேற்றா விட்டாலும் அது நபிலாகவே இருக்கும் என்பதே இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்தாகும்.

ஹனபிகள் நபிலான கருமங்களும் சட்ட அங்கீகாரம் பெற்றனவாக இருக்க வேண்டும் என்கின்றனர். நபிலான கருமங்களும் நிறைவேற்று மாறு வேண்டப்பட்டனவாகும். எனவேதான் அவற்றை நிறைவேற்றத் தவறினால் பின்னர் மீட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

''உங்களது நல்லமல்களை வீணாக்கிக் கொள்ளாதீர்கள்'' (33:47) என்ற வசனத்தை தமது கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். அவ்வாறே நபிலான கருமங்கள் நேர்ச்சை வைக்கும் போது வாஜிபாக மாறுகின்றன. குறித்த

48ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு III

- அஷ்ஷெய்க் றவுப் ஸெயின் நளீமி **M.Phil**

## இஸ்லாம் பயங்கரவாதத்திற்கு எதிரானது

இன்று மத்திய கிழக்கிலும் உலகின் வேறு பல பகுதிகளிலும் செயற்பட்டு வரும் பயங்கரவாத அமைப்புக்கள் கொலைகளிலும் கொள்ளைகளிலும் ஈடுபட்டு வருவது கண்டனத்துக்குரியது. பொதுவாக மத்திய கிழக்கில் ஆயுதம் ஏந்தி போராடும் குழுக்களின் பயங்கர வாத நடவடிக்கைகளுக்கும் இஸ்லாத் துக்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லை. இஸ்லாத்தின் மீது அவதூறு கற்பிப்பதற்கு சில மேற்கத்திய சக்திக ளால் இத்தகைய ஆயுத குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்ற சந்தேகம் வலுவாக எழுகின்றது.

பயங்கரவாதம், தீவிரவாதம், வன்முறை என்பவற்றுக்கு இஸ்லாம் எதிரானது. இஸ்லாத்தில் அவை முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் சமாதானத்தின் மார்க்கம். அது அமைதியைப் போதிக்கின்றது. தனி மனிதன், குடும்பம், சமூகம், தேசம், சர்வதேசம் என்ற அனைத்து பரிபானங் களிலும் அமைதியை நிலைநாட்டுவதே இஸ்லாத்தின் சாராம்சம். இந்நிலையில் முஸ்லிம் அல்லாதோர்களைக் கடத்து வதோ, காயப்படுத்துவதோ, அவர்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதோ, கொலை செய்வதோ இஸ்லாத்தில் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது.

புறநிலையாக பேசுவதானால், எல்லா மதங்களுமே அமைதி, நட்புறவு, சமாதான சகவாழ்வு என்பவற்றையே ஆதரிக்கின்றன. வெறுப்பு, பகைமை, வன்முறை ஆகியவற்றை எந்த மதமும் ஏற்கவில்லை. இஸ்லாத்தில் இறை ஞானத்தை அடிப்படையாகக் கொண் டுள்ள புனித குர்ஆனும், ஹதீஸும் (முஹம்மது நபியின் வழிமுறை) இவற்றை தெளிவாக நிறுவுகின்றன. இஸ்லாம் சமாதான சகவாழ்வு, சமரசம், சகிப்புத் தன்மைக்கான சமயமாகும். எல்லாவிதமான பயங்கரவாதத்தையும் அது மறுதலிக்கின்றது.

சமத்துவம், மனித மாண்பு, வரம்பு மீறாமை, சகிப்புத்தன்மை, அகிம்சை, இக்கட்டில் இருப்போருக்கு ஒத்தாசை ஆகியவற்றை இஸ்லாம் உயர்த்திப் பிடிக்கின்றது. ''ஒருவர் நியாயம் இன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதரைக் கொலை செய்தார் என்றால் அவர் எல்லா மக்களையுமே கொலை செய்தது போன்றாகும்'' அப்படியே ஒருவர் ஓர் உயிரைக் காப்பாற்றுவாரானால் அவர் எல்லா மக்களையும் காப்பாற்றியவர் போன்றாவார். (அல் மாயிதா: 32) என்கிறது அல்குர்ஆன்.

இதன்படி தனி நபர்களோ, குழுக் களோ தன்னிச்சையாக ஆயுதமேந்து வதும், வன்முறைகளைக் கட்டவிழ்த்து வதும் மார்க்கத்தில் முற்றாகத் தடுக்கப் பட்டுள்ளது. முஸ்லிம் அல்லாதோர் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு முஸ்லிம் ஒரு முஸ்லிம் அல்லாதோர் மீது வன்முறை செய்யவோ தாக்குதல் நடத்தவோ இஸ்லாத்தில் எந்த அனுமதியும் இல்லை.

தாவரங்களும், விலங்கினங்களும் மனிதனுக்குக் கீழ்ப்பட்டவைதான். என்றாலும் அவற்றிலிருந்து நல்லதைப் பெற்றுக்கொள்வதையே இஸ்லாம் அனுமதிக்கின்றது. அவற்றை வீணாக பயன்படுத்துபவரை இஸ்லாம் தடுக்கின்றது. அவற்றிடம் அன்பாக நடந்து கொள்ளுமாறும், இனிய உறவுகளைப் பேணுமாறும் விதிக்கின் றது. உண்மை இப்படி இருக்க இஸ்லாம் பயங்கரவாதத்துடன் அடையாளப் படுத்திப் பார்க்கப்படுவது கொடுமையா னது. முஸ்லிம்கள் தாக்குதல் கொடுக்கும் போது அவற்றை உலக ஊடகங்கள் இஸ்லாமிய பயங்கரவாத தாக்குதல் என அழைப்பதும், தாக்குதல் மேற்கொண் டோரை பயங்கரவாதிகளாக அடையா ளப்படுத்தவதும் திட்டமிட்டு மேற் கொள்ளப்படுகின்றது. இம் மனப் பான்மை பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். அப்பாவி முஸ்லிம்கள் அதனால் தவறாக வழிகாட்டப்படக் கூடும்.

பயங்கரவாதத்தை ஜிஹாத் எனக் கருதுவது தெரியாமலோ அல்லது தெரிந்து வேண்டுமென்றோ மதத்தைப் பற்றிய முற்றிலும் பிழையான ஒரு காட்சியை முன்நிறுத்துவதாகும். பொதுவாகவே ஜிஹாத் என்பது முஸ்லிம் அல்லாதோர்களால் தவறாக பொருள்கோடல் செய்யப்படுகின்றது. ஜிஹாத் என்றால் மும்முர முயற்சிகள், முழு முயற்சி, ஆன்மீக தார்மீக போராட்டத்தை நோக்கிய கடுமையான உழைப்பு, அகங்காரத்தில் வழி செல்லாதிருத்தல், இறை நினைவோடு இருத்தல், தடுக்கப்பட்டதும் வெறுக்கத் தக்கதுமான நடத்தையிலிருந்து விலகி யிருத்தல், பொது அக்கறைக்குரியதான எல்லா அறிவுத் துறைகளிலும் மேன் படல் என்றெல்லாம் பல்வேறு பொருள் கள் பொதிந்த ஒரு விரிவான கருத்திய லாகும். நம்பிக்கையாளர்கள் ஒருமைப்படுத்தப்பட்டு அவர்களில் உயிர் வாழ்க்கைக்கு அபாயம் நேரும் சூழ்நிலைகளில் எதிரிகளுடன் மோதுவதையும் இது குறிக்கின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிரானது இஸ்லாம் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டும் மிகப் பொருத்தமான ஹதீஸ் இது ''மேலும் எவருக்கு எதிராகவும் எவ்விதமான அச்சுறுத்தலை யும் பயன்படுத்துவதை நான் விரும்ப வில்லை'' இதற்கு மாறாக இவ் வார்த்தைகளைக் கூறிய நபிகளார் யூதர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைப் பார்க்கச் சென்றார். மதினா அரசியல் அமைப்புச் சட்டத்தில் அவர்களது அனைத்து உரிமைகளையும் உத்தரவாதம் செய்தார்.

எரிச்சல் மூட்டப்படும் இடத்திலும் பொறுமையையும் மன்னிப்பையுமே போதிக்கின்றது இஸ்லாம். இஸ்லாம் நீதியையும் பரிவையுமே ஊக்குவிக்கின்றது. ஒடுக்குமுறையை தடுக்கின்றது என்பதையும் கவனத்தில் கொள்ளத் தக்கது. நீதி என்பது ஒரு புனிதமான பொறுப்பாகவும் அறச் செயல்கள் யாவற்றிலும் சிறந்ததாகவும் கருதப்படு கின்றது. ஒடுக்கு முறையானது நீதிக்கு எதிரானதாகும். குர்ஆனில் நீதி தொடர்பாக வரும் பல்வேறு வசனங்களை வாசிக்கையில் இதை உயத்துணர முடிகின்றது.

இஸ்லாத்தைப் பயங்கரவாதததுடன் சேர்த்து இனங்காண்கின்றவர்கள் பொதுவாக அல்குர்ஆன் அத்தியாயம் இரண்டில் வரும் 191 வது வசனத்தைத் தவறாகப் புரிந்துகொள்கின்றனர்.

''அவர்களை நீங்கள் எங்கு பிடித்தாலும் வெட்டி வீழ்த்துங்கள் மேலும் உங்களை அவர்கள் வெளியேற்றினார்களோ அங்கிருந்து அவர்களை நீங்களும் வெளியேற்றுங்கள் ஏனெனில் கொலையை விட கொடியவை அராஜகமும் அடக்குமுறையும் ஆகும்.'' (பகறா: 191)

இந்த வசனத்தை அது அருளப்பட்ட சூழலில் வைத்து மட்டுமே வாசிக்கவும் பொருள் கொள்ளவும் வேண்டும். மக்காவிலிருந்து மதீனாவுக்கு முஸ்லிம்கள் இடம் பெயர்ந்த பிறகும் கூட மக்கா வாசிகள் ஒடுக்குவதும், அடக்குவதும் தொடர்ந்தது. முஸ்லிம்களின் வனிக கூட்டத்தை அவர்கள் கொள்ளையிடவும் செய்தனர்.

முஸ்லிம்கள் தயங்கினார்கள். ஏனெனில் மக்காவாசிகள் மதீனாவுக்கு குடிபெயர்ந்தோரின் நெருங்கிய உறவினர்களாகி இருந்தனர். அவர்களை எதிர்த்துப் போராடுமாறு முஸ்லிம்களை இந்த வசனம் ஊக்குவிக்கின்றது. இதே அத்தியாயத்தில் வசனம் 190 இந்த பொருள் விளக்கத்தை ஆதரிக்கின்றது. அது கூறுகின்றது:

''உங்களோடு போர் புரிவோர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போர்புரியுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள்.''

வசனம் 191 குறித்து நிற்கும் சூழ்நிலையை குர்ஆனின் விளக்கவுரையாளர்கள் தெளிவாகக் குறிப்பிட்டும் கூட இஸ்லாம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றது என நிரூபிப்பதைக் குறிக்கோளாய்க் கொண்டுள்ள கீழை மொழி ஆய்வாளர்கள் அதற்கு தவறாக பொருள் உரைப்பதுதான் முரண்நகை.

போர் நிலமைகளைச் சந்திக்க இறக்கி அருளப்பட்ட அல் குர்ஆனிய வசனங்களை அமைதிக் காலத்திற்குப் பொருத்துவதுதான் வேடிக்கை. அத்தியாயம் 2 வசனம் 191யைப் போர்ச் சூழல்களில் மட்டுமே பிரயோகிக்க வேண்டும். பொதுவான முறையில் அது கையாள முடியாது.

பெரும்பாலும் முஸ்லிம்கள் எல்லாவிதமான பயங்கரவாதத்திற்கும் எதிராகவே இருக்கின்றனர். அதில் ஈடுபாடு கொண்டிருக்கும் ஒரு சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தைப் பிழையாகப் பொருள் கோல் செய்கின்றனர். அல்லது இஸ்லாத்தை வன்முறையோடு தொடர்புறுத்த வேண்டும் என கங்கணம்கட்டி செயற்படும் சக்திகளால் பயன்படுத்தப் படுகின்றனர்.

இந்த பின்னணியிலேயே சமகாலத்தில் உலகெங்கும் போராடிவரும பயங்கரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளை நாம் நோக்க வேண்டும். இஸ்லாத்தை பயங்கரவாதத்தோடு தொடர்புறுத்துவதன் மூலம் தனது கையிருப்பிலுள்ள ஆயுதங்களை விற்பனை செய்யத் துடிக்கும் சில மேற்கத்திய சக்திகளே இவ்வாறான ஆயுதக் குழுக்களுக்குத் தூண்டுதலளித்து வருகின்றன என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

சமாதானம், போர் என்பவற்றில் தொடர்ந்தும் இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வரும் மேற்கு நாடுகள் ஒருபுறம் வன்முறைகளைத் தூண்டி வருகின்றன. அதன் மூலம் வன்முறைக் குழுக்களுக்குப் பெரும் தொகையான ஆயுதங்களை விற்பனை செய்து வருகின்றன.

இன்னொருபுறம் தேசிய அரசுகளின் பாதுகாப்புக்கென பெருந் தொகை ஆயுதங்களை அரசாங்கங்களுக்கு விற்பனை செய்கின்றன. சமாதானம் குறித்து பேசி வரும் இந் நாடுகளே இத்தகைய ஆயுதக் குழுக்களை மறைமுகமாக இயக்கி வருவது கண்டனத்துக்குரியதாகும்.

மத்திய கிழக்கு நாடுகள் ஜனநாயக வழியில் இருந்து விலகி தீவிர மன்னர் ஆட்சியையும் மதச்சார்பு நிலையையும் நோக்கிச் செல்வதும் இத்தகைய ஆயுதக் குழுக்களின் தோற்றத்திற்கு மற்றொரு காரணமாகும். கடும் அடக்குமுறை, ஊழல் மோசடிகள், ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் போன்ற அரச பயங்கரவாதங்கள் இவ்வாறான குழுப் பயங்கரவாதங்களை உருவாக்குகின்றன. இந்த வகையில் தனது அரசாங்கங்கள் மீது நம்பிக்கை இழந்து விரக்தியடைந்த இளைஞர்களே இவ்வாறு ஆயுதம் ஏந்தி போராடுவதற்கு முனைகின்றனர். இதற்கு அறபு அரசாங்கங்களும் ஒருவகையில் வகை கூற வேண்டும்.

"மனித ஆளுமையில், உள்ளத்தில் மகத்தான ஆற்றல்கள் உள்ளார்ந்து மறைந்துள்ளன. இவற்றை இனங்கண்டு, போஷித்து வளர்ப்பதன் மூலமே மனித ஆளுமை சிறப்படைகின்றது. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கே உரிய தனித் தன்மை உள்ளது. அதனை அவன் வெளிக் கொண்டுவர முனைதல் வேண்டும்.
"உலகில் ஒவ்வொன்றும் அதன் உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலையிலேயே உள்ளன.

ஒவ்வொரு அணுவும உயர்ச்சியடையும் பணியில் தன்னை அழித்துக் கொள்கின்றது.

தனது ஆற்றல்களை வெளிப்படுத்தாத வாழ்வு வாழ்வன்று

தனது தனித் தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலமே சிறு கடுகானது பிரமாண்டமான மலையின் உருவத்தைப் பெறுகின்றது.

'நீ' என்னும் உனது மனித்தன்மை மட்டும்தான் உலகில் உண்மையானது ஏனைய அனைத்தும் வெறும் கானல் நீரேயாகும்".

**– அல்லாமா இக்பால் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் தாரிக் ரமழான் :

# சிந்தனைகளும் , கருத்துக்களும் - 4

**– அஷ்ஷெய்க் ஸகிபஸ்ஸ் (நளீமி) , (BA)**

சென்ற இதழின் தொடர்...

அதே போன்று ''வலு வேறாக்கம்'' என்ற ஜனநாயகத்தின் கூறினை ஆதாரப்படுத்துவதனை பொருத்தவரை , இஸ்லாமிய வரலாற்றின் நாற்பெரும் இமாம்களின் வாழ்க்கை வரலாறுகளே சான்றாகும். ஏனெனில், இமாம் அபூஹனீபா (றஹ்), இமாம் மாலிக் (றஹ்) , இமாம் ஷாபீஈ (ரஹ்) மற்றும் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) போன்றவர்கள் நீதித்துறை தலைமையாக பதவி வகிப்பதற்கு கலீபாக்களால் அழைப்பு வந்தபோது, இமாம்கள் அதனை மறுத்தனர். அதற்காக இமாம் மாலிக் மற்றும் இமாம அபூஹனீபா போன்றவர்கள் துன்புறுத்தப்பட்டமைக்கான வரலாற்று ஆதாரங்கள் ஏராளமானவை. தலைமை நீதிபதிப் பதவியை பெற மறுத்தமைக்கான பிரதான நியாயம், அக்கலீபாக்களின் கீழ் நீதித்துறை சுதந்திரம் காணப்படாமையாகும். இங்கு இஸ்லாமிய அரசியல் நிர்வாகத்தின் அடிப்படையாக ''வலுவேறாக்கம்'' அமைய வேண்டும் என்ற இமாம்களின் புரிதல் புலப்படுகிறது.

இஸ்லாம் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக அலசும் போது கலந்துரையாடப்பட வேண்டிய மற்றொரு மிக முக்கியமான விடயம் ''அதிகாரம்'' (Authority) பற்றியதாகும். மத வழிகாட்டல்களோ அல்லது மத போதனைகளோ அரசியல் பொறி முறையில் செல்வாக்குச செலுத்துவதனை ஜனநாயக் கோட்பாடு மறுககிறது. அதாவது, அரசியல் அதிகாரம் என்பது மதத்தினை விட்டும் பிரிந்துநிற்க வேண்டும் என ஜனநாயக கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வதிகாரம் பற்றிய சிந்தனைச் சிக்கல் மேற்குலகில் ஏற்படுவது நியாயம். ஏனெனில் , அங்கு அரசியல் அதிகாரத்தினை கிறிஸ்தவப் பாதிரிகள் கைப்பற்றி இருந்தனர். இஸ்லாமிய வரலாற்றில் அத்தகைய அதிகாரச் சிக்கல் ஏற்படவில்லை. ஆனால், வேறு விதத்தில் ''அதிகாரம்'' பற்றிய சிந்தனைச் சிக்கல் முஸ்லிம் சமுகத்திற்கு மத்தியில் நிலவுகிறது என தாரிக் ரமழான் விளக்குகிறார்.

அதாவது. இஸ்லாம் அரசியலையும் , ஆன்மீகத்தையும் உள்ளடக்கிய மார்க்கம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இரண்டையும் இஸ்லாம் அணுகும் விதம் வித்தியாசமானது. ஆன்மீகத்தினை வலுவூட்டும் இபாதத் சார்ந்த வழிகாட்டல்களைப் பொருத்தவரை, அதில் மனித சிந்தனையைப் பிரயோகிப்பதற்கு எதுவுமில்லை. அவ்வழிகாட்டல்கள் அருளப்பட்ட முறைமையை ''மேலிருந்து கீழ் நோக்கி'' (Top down approach) அணுகுமுறை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரிவில் தொழுகை , நோன்பு, ஸகாத் மற்றும் ஹஜ் போன்றனவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இத்தகைய மேலிருந்து கீழ்நோக்கிய அணுகுமுறையை வாழ்வியல் விவகாரங்களான அரசியல் , பொருளதாரம், கல்வி, கலை போன்றவற்றில் இஸ்லாம் கையாளவில்லை. மாறாக, இவற்றினை அணுகும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய சில ஒழுக்க விழுமியங்களையும் (Values and principles), இவற்றால் அடையப்பெற வேண்டிய உயர் சமூக இலக்குகளையும் (Objectives) மாத்திரமே இஸ்லாம் தொகுத்தளித்துள்ளது. அவற்றின் ஒளியில் இவ்வாழ்வியல் துறைகளை கையாளும் மற்றும் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தினை முழுமையாக மனித சிந்தனைக்கு அல்லாஹ் கொடுத்துள்ளான்.

இங்கு வாழ்வியல் விவகாரங்களை நிர்வகிப்பதில் ''அதிகாரம்'' பிரயோகிக்கப்படும் செயன்முறை கீழிலிருந்து மேல் நோக்கியதாக (Bottom to up approach) அமைவதனை நோக்கலாம். அதாவது, வாழ்வியல் விவகாரங்களில் மனிதர்கள் தங்களைத் தாங்களே நிருவகித்துக் கொள்ள வேண்டும என்றே இஸ்லாம் வழிகாட்டுகிறது. இவ்விவகாரங்களில் மக்களின் ஏகோபித்த தீர்ப்புக்கு எதிரான கருத்தொன்றை எந்த இஸ்லாமிய அறிஞனும் இஸ்லாத்தின் பெயரால் திணிக்க முடியாது எனவும் இஸ்லாம் குறிப்பிடுகிறது. இன்றைய ஈரானிய அரசியல் திட்டவரைபில் காணப்படும் ''விலாயதுல் பகீஹ்'' முறைமையை இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர்கள் மறுதலிப்பதன் பின்புலமும இதுதான். ஏனெனில், விலாயதுல் பகீஹ் முறைமை தேச நிருவாகத்தில் மனித சிந்தனையினைக் கட்டுப்படுத்தும் தன்மையைக் கொண்டுள்ளது என அவ்வறிஞர்கள் வாதிக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் சமூக விவகாரங்களை முகாமை செய்வதில் மனித சிந்தனையே அடிப்படையாக அமைய வேண்டும என்ற ஜனநாயகக் கோட்பாட்டினை இஸ்லாமிய அரசியல் சிந்தனையும் அங்கீரிக்கிறது என்கிறார் பேராசிரியர் தாரிக் ரமழான்.

இறுதியாக, அரசியல் நிருவாகத்தில் சட்டவாட்சியின் முக்கியத்துவம், வலுவேறாக்கம் மற்றும் மதத் துறவிகளின் செல்வாக்கினை அரசியல் தீர்மானங்களில் கட்டுப்படுத்தல் போன்ற நவீன ஜனநாயகத்தின் பண்புகளை இஸ்லாமிய உலகத்திலிருந்தே ஐரோப்பா பெற்றுக கொண்டது என தாரிக் ரமழான் ஆதாரப்படுத்துகிறார். எனவே, கோட்பாடு என்ற ரீதியில் ஐரோப்பா ஜனநாயகத்தினை பிரசவித்தாலும் கூட, அதன உட்பொருள்களை இஸ்லாமே முதலாவதாக அடையாளப்படுத்தியது என்கிறார் தாரிக் ரமழான். எனவே, அனைத்து சமூகங்களும் இணைந்து பெற்றெடுத்த உயர் விழுமியங்களாக (Shared political ethics)''ஜனநாயகத்தை'' அடையாளப் படுத்துவதே பொருத்தமானது என மேலும் அவர் வாதிக்கிறார்.

**ஜனநாயகக் கோட்பாட்டினை அணுகுவதில் மேற்குலகு விடும் தவறுகள் :**

ஜனநாயகக் கோட்பாட்டினை கையாள்வதில் மேற்குலகு விடும் சில தவறுகளை பேராசிரியர் தாரிக் ரமழான் வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபுலகத்தை ஜனநாயகமாக்கலுக்கு உட்படுத்த வேண்டும் என மேற்குலகு பேசிவருகிறது. அதற்கான முயற்சிகளை ஆப்கான் , லிபியா, ஈராக் , ஈரான மற்றும் சூடான் போன்ற நாடுகளில மேற்கொண்டு வருகிறது. இவ்வனைத்து நாடுகளிலும் மேற்குலகின் ''ஜனநாயகமயமாக்கல்'' செயற்திட்டங்கள் படுதோல்வியிலேயே நிறைவு பெற்றன. இதற்கான பிரதான நியாயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது ''ஜனநாயகமயமாக்கல்'' விடயத்தில் குறித்த நாடுகளில் வாழும் மக்களின் தன்மையினை, மத அடையா ளத்தினை, கூட்டு உளவியலை புரிந்து கொள்ளாமல் ''ஜனநாயமயமாக்கல்'' செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அது பாரியதொரு தவறாகும். அதன் தாக்கத்தினை கீழ்வரும் உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

மேற்குலகு பயன்படுத்தும் சில அரசியல் பரிபாசைச் சொற்களை முஸ்லிம் உலகு வித்தியாசமான உளவியல் பின்புலத்தி லேயே புரிந்து கொள்கிறது. உதாரணமாக ''மதச்சார்பற்றவாதம்'' மற்றும ''ஜனநாயகம்'' போன்றவற்றினை அரசியலில் அடிப் படையாக மேற்குலகு கருதுகிறது. இதனை அப்படியே இஸ்லாமிய உலகின் நாடி நாளமெல்லாம நகர்த்துவதற்கு மேற்கு முயல்கிறது. ஆனால், இந்த முயற்சியால் முஸ்லிம் உலகு பிளவுபட் டதே தவிர, அதன் உள்ளடக்கமான மதச் சுதந்திரம், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், அரசியலில் பொறுப்புக் கூறல் மற்றும் மக்களின் ஆட்சி போன்ற வற்றை முஸ்லிம் உலகம் உள்வாங்கிக் கொள்ளவில்லை. காரணம், ''மதச்சார் பற்றவாதம்'' மற்றும் ''ஜனநாயகம்'' போன்ற அரச மற்றும் சமூகவியல் கருத்தியல்களை ''சுதந்திரம்''( Libration) என்ற கருத்தியலுக்கு சமனானவைகளா கவே மேற்குலகம் புரிந்து கொண்டுள்ளது. இதற்கு இக்கருத்தியல்கள் பிறந்த வரலாற்று நிகழ்வுகளே காரணமாகும். கொடுங்கோல் கிறிஸ்தவ பாதிரிகளிட மிருந்தும், சர்வதிகார மன்னர்களிட மிருந்தும் சுதந்திரம் பெறும் மக்கள் போராட்டமே ''மதச்சார்பற்றவாதம்'' (Secularity) என்ற அரச- சமூகவியல கோட் பாட்டினை தோற்றம் பெறச் செய்தது.

ஆனால், இவ்வரசியல் சொற்கள் இஸ்லாமிய உலகில் அறிமுகமாகிய வரலாற்றுப் பின்புலம் வித்தியாசமானது. குறிப்பாக ''மதச்சார்பற்றவாதம்'' என்ற மேற்குலகு போதிக்கும் அடிப்படை அரசியல் கருத்தியலை ''காலனித்துவத் திற்கான கருவி'' (Colonization) என்றே இஸ்லாமிய உலகம் நோக்குகிறது. காரணம், பிரான்ஸினாலும், பிரிட்டனி னாலும், ரஷ்யாவாலும் இஸ்லாமிய உலகம் காலனித்துவதற்திற்கு உட்படுத் தப்பட்டிருந்த காலப்பகுதியிலேயே ''மதச்சார்பற்றவாதம்'' என்ற சொல் இஸ்லாமிய உலகில் அறிமுகமாகியது. இதனால் முஸ்லிம் உலகு ''மதச்சார்பற்ற வாதம்'' என்ற சொல்லினை தனது கலாச்சாரத்தினை, வரலாற்று மரபுரிமை களை மற்றும் சிந்தனையினை ஆக்கிர மிப்பதற்கான கருவியாகவே நோக்கியது. இங்கு ஒரே சொல் இரு வேறுபட்ட வரலாற்றுப் பின்புலத்தில மேற்குலகிலும், இஸ்லாமிய உலகிலும் தோற்றம் பெற்றுள் ளதனை நோக்கலாம். இவ்வித்தியா சத்தினை புரிந்து கொள்ளாத நிலையில் அரசியல் கருத்தியல்களை இஸ்லாமிய உலகில் தூவி விடுவது மேற்குலகு விடும் அடிப்படையான தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் உலகும் நீண்ட வரலாற்றினை மற்றும் நாகரீகத்தினை கொண்ட பிராந்தியாமாகும். இந்தப் பின்புலத்தில் அரசியல் சார்ந்த பரிபாசைச் சொற்களினை விட, அது உள்ளடக்கியுள்ள உட்பொருள் களை , அடிப்படைகளை மற்றும தத்துவங் களை மையப்படுத்தி இஸ்லாமிய உலகுடனான கலந்துரையாடல்கள் அமையும் பட்சத்தில், ஆரோக்கியமான கருத்துப் பகிர்வொன்று மேற்குலகிற்கும் -இஸ்லாமிய உலகிற்கும் மத்தியில் இடம் பெற்றிறுக்க வாய்புண்டு என்கிறார் பேராசிரியர் ரமழான்.

''புவி-அரசியல் நலன்கள்'' (Geo-political interests) ஜனநாயகத்திற்கு நேரெதிரா னது என்பது மேற்குலகம் புரிந்து கொள்ள வேண்டிய இரண்டாவது விடயமாகும். ஜனநாயகக் கோட்பாட் டினை அரசியல் நலன்களினை மையப் படுத்தியே மேற்குலகு நோக்குகிறது. இது தவறாக அணுகுமுறையாகும். இஸ்லாமிய உலகுடன் காத்திரமான ''ஜனநாயகம்'' பற்றிய கலந்துரையா டலை நடாத்துவதற்கு மேற்கின் இவ்வணுகு முறை துணை செய்ய மாட்டாது. மக்களின் நலன்களை ஒடுக்கும் அரபு மன்னர் களையும், இராணுவச் சர்வதிகாரிகளை யும் ஆதரிக்கும் நிலையில் , எவ்வாறு ஜனநாயகம் பற்றி முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் மேற்குலகு பிரச்சாரம் செய்ய முடியும்? என கேள்வியெழுப்புகிறார் தாரிக் ரமழான். ''ஜனநாயக விழுமியங் களின்'' பெயரால் செயற்படுத்தப்படும் பிழையான ஜனநாயக விரோத செயற்பாடுகளை மேற்குலக பிரஜைகள் கேள்விக்கு உட்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்துகிறார்.

இதற்குமப்பால், தமது சொந்த பிராந்தியங்களிலேயே ஜனநாயகத் தினை செயறப்படுத்துவதில் மேற்குலகு தன்னை சுய விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும் என தாரிக் ரமழான் குறிப்பிடு கிறார். ஏனெனில், மீடியாக்கள், இஸ்லாமோ பியா மற்றும் பாதுகாப்பு கொள்கைகள் போன்ற கருவிகளைக் கையாண்டு பிரஜைகளின் அரசில் பிரஞ்சைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இன்னும், மிகப் பெரும் பொருளாதார கம்பனி களே அரசியல் தீர்மானங்களினை மேற்குலகில் மேற்கொள்கின்றன. இதற்கு ஈராக் மீதான பிரிட்டனினதும், அமெரிக்கா வினதும் யுத்தம் சிறந்த சாட்சியாகும். அந்த யுத்தத்திற்கு எதிராக முழு உலகமுமே எதிர்த்தது நின்றது. ஆனால், ஜனநாயகத்தின் காவலளர்களான புஷ்ஷும், பிளேயரும் போரிற்கு சென்ற னர். இந்நிகழ்வு மேற்குலக ஜனநாயகம் பற்றிய ஒரு கருப்புப் பக்கத்தினை கற்றுத் தருகிறது. அதாவது, மேற்குலகில் பேச்சுத் சுதந்திரம் , ஆர்ப்பாட்டம செய்யும் சுதந்திரம் போன்றன தாராளமாகக் காணப்படுகின்றன. ஆனால ''எதனைப் பற்றியும் குரலெழுப்புங்கள், கேட்பதற்கு அரசாங்கத்தின் காதுகள் தயாராக இல்லை'' என்பதே மேற்கின் ஜனநாயக முன்மாதிரி.

ஜனநாயகம் என்ற பெயரில் மேற்குலக மக்களும் ஏமாற்றப்படுகின்றனர். எனவே, முஸ்லிம் உலகில் ஜனநாயகத் தினை நிலைநாட்ட வேண்டும் என வாதாடும் மேற்குலக புத்திஜீவிகள் , முதலாவதாக ''ஜனநாயகம்'' தங்களது நாட்டில் நிலை நாட்டப்பட்டிருககிறதா? என சிந்திக்க வேண்டிய காலமிது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால் விடுகிறார் தாரிக் ரமழான். இதனால், முழுமையான ஜனநாயக செயன்முறைக்கு மேற்குலகு முன்மாதிரி எனக் கூற முடியாது. ஜனநாயகம் என்பது அது உள்ளடக்கியுள்ள அர்த்தங்கள் உண்மையாக பாதுகாக்கப்படுவதாகும். நாம ஜனநாயக விழுமியங்களைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர, அதற்கு மேற்குலகினை உதாரணமாகவோ அல்லது மாதிரியாகவோ வர்ணம் தீட்ட அவசியமில்லை என ஐரோப்பிய இஸ்லாமிய சிந்தனையாளா பேராசிரியர் ரமழான் தெரிவிக்கிறார்.

**ஜனநாயகக் கோட்டிபாட்டினை புரிந்து கொள்வதில் இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் விடும் தவறுகள் :**

கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஜனநாயகம் பற்றிய மேற்குலகுடனான கலந்துரையாடல்களை இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் அல்லது அதன் சிந்தனை வட்டத்தினை சார்ந்த புத்தி ஜீவிகளே வழிநடாத்தி வருகின்றனர். இந்த வகையில், ஜனநாயகம் பற்றிய இஸ்லாமிய அரசியல் இயக்கங்களின் புரிதலில் காணப்படும் பல தவறுகளை பேராசிரியர் தாரிக் ரமழான் அடையா ளப்படுத்துகிறார். அவற்றில ஜனநாயகம் என்ற எண்ணக் கருவின் பொருளாதார பா!மாணத்தினை (Econamical dyamension) இஸ்லாமியவாதிகள் மிகக் குறைவாகவே புரிந்து வைத்துள்ளனர் என அவா குறிப்பிடுகிறார். அதாவது, ஜனநாயக மாற்றம் என்பது வெறுமனே அரசியல் கருவிகளை சாணக்கியமாக கையாள்வதனால் மாத்திரம் நிகழ்ந்து விடும் என இஸ்லாமியவாதிகள் நினைக்கின்றனர். அதன் பொருளாதார பரிமாணத்தினை மறந்து விடுகின்றனர். இதன் விளைவாக, இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் 'ஜனநாயகத்தினை' வரவேற்கின்றன. அதே நேரம், முதலா ளித்துவ பொருளாதார ஒழுங்கையும் ஜனநாயகத்தின் வடிவமாகக் கருதி உள்வாங்குகின்றனர்.

யதார்த்தத்தில், திறந்த பொருளாதாரம் என்பது ஒரு நாட்டின் ஜனநாயகத் தினை மற்றும் நல்லாட்சியினை கட்டுப் படுத்தும் மிக மோசமான பொறிமுறை யாகும். ஏனெனில், சர்வதேச சக்திகள் தேசத்தின் அரசியல் நகர்வுகளை கட்டுப் படுத்துவதற்கான வாயிலை அது திறந்து கொடுக்கிறது. இதன் விளைவாகவே, திறந்த பொருளாதாரத்தினை ஆதரிக்கும் ஜனநாயகத்தினை மாத்திரமே சர்வதேச சக்திகள் வரவேற்கின்றன. மறுபுறத்தில், திறந்த பொருளாதாரத்தினை ஆதரிக்காத ஜனநாயதக்தினை அது ஏற்க மறுக்கிறது. மேலும் அத்தகைய ஜனநாயகத்தினை சீர்குலைப்பதற்கு தேவையான சகல அழுத்தங்களையும் பிரயோகிக்கிறது. அதேநேரம், திறந்த பொருளாதாரத் தினை ஏற்கும ஜனநாயக மறுப்பாளர் களை வரவேற்கிறது. இவ்வாறு குறித்த நாட்டின் பொருளாதாரத்தினை சுரண்ட முடியுமா ? முடியாதா?, என்பதன அடிப் படையிலேயே, அந்நாட்டின் ஜனநாய கத்தை ஆதரிப்பதா ? இல்லையா? என்பதனை சர்வதேச சக்திகள் தீர்மானிக் கின்றன. இந்தப் பின்புலத்தில், பொருளா தார பரிமாணத்தினை விட்டுவிட்டு ஜனநாயகத்தினை ஏற்படுத்தும் அரசியல் கருவிகள் தொடர்பாக மாத்திரம் அலசு வது தவறான அணுகுமுறையாகும். இவ்வாறு பொருளதார பரிமாணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினை மறந்த நிலையிலான ஜனநாயக மயமாக்கல் முயற்சிகள் யாவும் தோல்வியை தழுவியுள்ளதனையே கடந்த நூற்றாண்டினுடைய சர்வதேச அரசியல் அனுபவங்கள் கற்றுத் தரும பாடமாகும். எனவே, முன்மாதிரி ஜனநாயக செயற்பாட்டாளர்களாக இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் செயற்பட வேண்டுமாக இருந்தால் , நிச்சயம் முதலாளித்துவ திறந்த பொருளதார ஒழுங்கிற்கு எதிரான மாற்று பொருளாதாரத் திட்டமிடலும் அவர்களிடம் இருக்க வேண்டும் என வலியுறுத்து கிறார் தாரிக் ரமழான்.

அடுத்து, ஜனநாயகத்தின் கலாச்சாரப் பரிமாணம் பற்றிய சிந்தனையும் இஸ்லாமிய இயக்கங்களிடம் குறைவாகவே காணப்படுகிறது என அவர் சுட்டிக்காட்டுகிறார். ஜனநாயகம் என்பது ஒரு பிரஜையின் சுதந்திரத்தினை தீர்மானிக்கும விழுமியங்களாகும். ஒரு பிரஜை தனது சுதந்திரத்தினை வெளிப்படுத்தும் தளங்களில் ஒன்றாக கலையையும், கலாச்சாரத்தையும் குறிப்பிடலாம். இந்த வகையில் மனித உணர்வுகளை வெளிக் கொண்டு வரும் கலைகளை , கலாச்சாரத்தினை பிரதிபளிக்கச் செய்ய அனுமதி வழங்கப்படாத நாடுகளில் ''ஜனநாயகம்'' இல்லை என்றே குறிப்பிடலாம். எனவே, இஸ்லாமிய இயக்கங்களின ஜனநாயகத்திற்கான போராட்டம் வெறும் அரசியல் கருவிகளை மையப்படுத்தியதாக மாத்திரம் அமைவது போதாது. மாறாக, சிறந்த கலை மற்றும் கலாச்சார பாரம பரியங்களை பிரதிபளிக்கச் செய்யும் சமூக சூழலுக்கான தளத்தையும் அமைத்துக் கொடுக்கக் கூடிய திட்டங்கள் ''ஜனநாயகத்தினை'' இலக்ககாக் கொண்டு தொழிற்படும் இஸ்லாமிய இயக்கங்களிடம் இருக்க வேண்டும் என தாரிக் ரமழான் வலியுறுத்துகிறார்.

மூன்றாவதாக, ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி போன்ற அரசியல் விழுமியங்களைக் கையால்வதில் காலனித்துவ படிமங்களுக்குல் இஸ்லாமிய இயக்கம் தொடர்ந்தும் சிக்கித் தவிக்கிறது. இதனால், சமகால சவால்களை மிகைக்கக் கூடிய அரசியல் திட்டங்களை வகுப்பதில் அவை பின்நிற்பதாக தாரிக் ரமழான் வாதிக்கிறார். இன்று முஸ்லிம் உலகம் எதிர்கொள்ளும் அரசியல் சார்ந்த சவால்கள் என்ன? நாளைய முஸ்லிம் உம்மாவின் அரசியல் நகர்வுக்கான இலக்குகள் என்ன? அரசியல் குறித்து முஸ்லிம் சமூகத்தின் சிந்தனையில் உள்ள கோளாருகள் யாவை? இஸ்லாத்தின் அடிப்படை அரசியல் சார்ந்த இலக்குகள் என்ன? போன்ற மையப் பிரச்சினைகளிருந்து அரசியல் குறித்த கலந்துரையாடல்கள் துவங்க வேண்டும். இத்தகைய கேள்விகளே முஸ்லிம் உம்மாவின் உள்ளாலிருந்து அரசியல மாற்றமொன்றை சாதிப்பதற்கு துணை செய்யும. அத்தகைய முன்மாதிரி மாற்றமொன்றினை நோக்கிச் செல்வதில் முஸ்லிம் உம்மா எதிர்கொள்ளும் உள்ளார்ந்த தடைகளையும் அடையாளப்படுத்திக் கொடுக்கும். இறுதியில், மேற்குலகினை விட்டும் விடுபட்ட தனித்துவமான விழுமிய அரசியல் கலாச்சாமொன்றினை நிலைபெறச் செய்யும் வரை அது நீண்டு செல்லும் என்கிறார் தாரிக் ரமழான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், நீண்ட காலமாக இஸ்லாமிய அரசாங்கம் , இஸ்லாமிய ஆட்சி மற்றும் இஸ்லாமிய சட்டத்தை வாழவைக்கும் சட்டயாப்பு போன்ற சொற்களே இஸ்லாமிய இயக்கங்களின் அரசியல் அகராதியில் இடம்பிடித்திருந்தன. அதற்கான பிரதான காரணம், இத்தகைய அம்சங்களையே மேற்குலகின் காலனித்துவ சதித் திட்டங்கள் இல்லாமல் செய்து விட்டன என இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் சிந்தித்தன. எனவே, இதனை மீண்டும் அடைவதே அரசியலின் இலக்கு எனக் கருதி செயற்பட்டன. வரலாற்று பின்புலத்தில் நோக்கும் போது , இஸ்லாமிய அரசியல் இயக்கங்களிடமிருந்து வெளிப்பட்ட இத்தகைய சிந்தனைகள் இயல்பானதே. ஆனால், ''இஸ்லாமிய அரசு'' ''இஸ்லாமிய அரசாங்கம்'' மற்றும் இஸ்லாமிய சட்டயாப்பு போன்ற வார்த்தைகள் முஸ்லிம் உம்மாவிற்குள் குடிகொண்டிருந்த அரசியல் சார்ந்த சிந்தனைக் கோளாருகளையோ அல்லது அன்றைய முஸ்லிம் உம்மாவினை அடிமைத்துவத்திற்கு உட்படுத்துவதன் பின்புலத்தில் தொழிற்பட்ட மேற்குலகின் இலக்குகளையோ மிகச் சரியாக அடையாளப் படுத்திக் கொடுக்கவில்லை.

உண்மையில் இஸ்லாமிய அரசினை , அரசாங்கத்தினை அல்லது சட்டயாப்பினை இல்லாமல் செய்வது மேற்குலக காலனித்துவத்தின் இலக்காக இருக்கவில்லை. மாறாக, அரசியல் விழுமியங்களான மக்களாட்சி , நீதி மற்றும் சட்டவாட்சி போன்றவற்றினை இல்லாமல் செய்து , தனது காலனித்துவ பொருளாதார நலன்களை அடைந்து கொள்ளக் கூடிய சர்வதிகார ஆட்சியை அல்லது குடி மக்களின் குரலுக்கு பெறுமானமே இல்லாத ஆட்சினை நிலைநாட்டிக் கொள்வதே காலனித்துவத்தின் பிரதான இலக்காக (Prime objective) இருந்தது. இந்த இலக்கினை அடையும் இடைக் கால வழிமுறையாகவே (Means) இஸ்லாமிய அரசு, அரசாங்கம் மற்றும் யாப்பு போன்றவற்றினை காலனித்துவம் எதிர்த்தது.

இங்கு இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் விட்ட பிரதான தவறு என்னவென்றால், அவை காலனித்துவத்தினை எதிர்த்தல் என்ற பெயரில் அதன் இலக்குகளை விளங்கி எதிர்க்கமால் , இடைக்கால வழிமுறைகளையே எதிர்ப்பதற்கு தலைப்பட்டனர்.

இதன் நேரடி விளைவு யாதென்றால், புதிதாக சுதந்திரம் பெற்ற தேசங்களின் அரசியல் இலக்குகள் எதுவாக அமைய வேண்டும்? அதனை அடைவதில் அவை எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் யாவை?, மற்றும் அச்சவால்களை மிகைப்பதற்கு தடையாக உள்ள முஸ்லிம் உம்மாவின் சிந்தனையில் படிந்துள்ள சிக்கல்கள் யாவை ? இவற்றுக்கான இஸ்லாமிய சிந்தனைகள் என்ன? போன்ற அரசியல் பொறிமுறையின் இலக்குகளுடன் தொடர்புட்ட யதார்த்தபூர்வமான அடிப்படைக் கேள்விகளை தவிர்க்கப்பட்டு , ''இஸ்லாமிய அரசு'' ''இஸ்லாமிய அரசாங்கம்'' மற்றும் இஸ்லாமிய சட்டயாப்பு போன்ற கிளையம்சங்களின் மீது இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் கவனத்தினை குவித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பின்புலத்தில் காலனித்துவத்தின் இலக்குளை சரியாக அடையாளம் காண்பதற்கு முடியாத எமது அறிவீனமே, அதன் இரும்புக் கரங்களுக்குல் நாம் சிக்கிக் கொண்டமைக்கான காரணம் என உணர்த்துவதற்கு இஸ்லாமிய சிந்தனை யாளர் மாலிக் பின் நபி அதீர பிரயத்தனம் எடுத்தார். இதற்காகவே ''முஸ்லிம் உம்மா காலனித்துவப்படுத்தப்படுவதற்கு, அவர்கள் காலனித்துவத்திற்கு உட்படக் கூடிய தகைமைகளைப் பெற்றிருந்த மையே காரணம்'' என்ற கருத்தினையும் முன்வைத்தார். ஆனால், ''காலனித்துவத்தை எதிர்த்தல் மற்றும் இஸ்லாமிய அரசை உருவாக்குதல்'' என்ற கோஷத்தின் வலிமைக்கு நிகராக மாலிக் பின நபியின் ஆழ்ந்த அர்த்தத்துடன் கூடிய வார்த்தை களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இவ்வாறு ''பொருளதார சுரண்டல்'', ''மக்களாட்சியை கட்டுப்படுத்தல்'' □சமூக நீதிக்கான செயற்திட்டங்களை அடக்குதல்'' போன்ற காலனித்துவத்தின் இலக்குகளை (Prime objectives), ''இஸ்லாமிய அரசு'', ''இஸ்லாமிய சட்டயாப்பு'', ''இஸ்லாமிய அரசாங்கம்'' போன்ற இஸ்லாமிய இயக்கங்களின் வழிமுறைகளால் (Means) எதிர்கொள்ள முடியாத நிலையில் 60 வருடம் சர்வதிகாரம் இஸ்லாமிய உலகில் நிலைத்திருந்தது என தாரிக் ரமழான் குறிப்பிடுகிறார்.

1950-60 களில் இஸ்லாமிய இயக்கங்கள் விட்ட தவறுகளை இன்றும் அவை சீர்செய்து கொள்ளவில்லை. 2011 இல் ஏற்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்டங் களின் பின்னரும் வழிமுறைகளை இஸ்லாமியமயப்படுத்தல் (Islamaisation of means ) குறித்து சிந்திப்பதற்கு சிந்தனையினை செலவிட்ட அளவுக்கு, அரசியல் இலக்குகளை (Islamaization of objectives) குறித்து இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் சிந்தனையினை செலவிடவில்லை. இதன் விளைவாகவே இன்றைய அரபு-இஸ்லாமிய நாடுகளில் மீண்டும் சர்வதிகாரம் மீளெழுச்சி பெற ஆரம்பித்துள்ளது என அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

எனவே, காலனித்துவத்தினை மற்றும் மேற்கு சக்திகளை எதிர்த்தல் என்ற உணர்வுப் பரவச நிலையிலிருந்து விடுபட்டு, அறிவுபூர்வமாக உம்மாவிற் கான அரசியல் இலக்குகளை மற்றும் அதனை நோக்கிய பாதையினை கட்டி யெழுப்பும் பணிக்கு இஸ்லாமிய இயக்கங்கள் நகர வேண்டும் என்கிறார் தாரிக் ரமழான்.

## இறுதிச் சுருக்கம்

பேராசிரியர் தாரிக் ரழானின் வாசிப்பின் ஒளியில் ஜனநாயகம் என்ற அரசியல் கருத்தியல் இஸ்லாமிய அரசியல் கோட்பாடுகளுடன் முழுமையாக உடன்படுகிறது என்பதாகும். ஆனாலும், அதன் பொருளாதார மற்றும் கலாச்சார பரிமணாங்களை புரிந்து கொள்வதில் இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் தவறிழைத்திருப்பதாக அவர் குறிப்பிடு கிறார். அதே நேரம், ஜனநாயகக் கோட் பாட்டினை கையால்வதிலும் , அதனை சர்வதேச அரசியல் கருத்தியலாக சந்தைப்படுத்துவதிலும் மேற்குலகு விட்டுள்ள தவறுகளையும் அவர் அடையாளப்படுத்துகிறார். இன்னும், இத்தகைய அரசியல் கருத்தியல்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் பிபாசைச் சொற்களை மையப்படுத்தி அல்லாமல், அதன் உட்பொருள்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையப்படுத்தி அமைவதே மேற்கு மற்றும் இஸ்லாமிய நாகரீகங்களுக்கு மத்தியிலான நேர்மறையான கலந்துரையாடல்களுக்கு துணை செய்யும் என தாரிக் ரமழான் சுட்டிக் காட்டுகிறார். இறுதியாக, காலனித்துவ படிமங்களிருந்து விடுபட்டு சமகால சவால்களை மிகைக்கும் வகையிலான அரசியல் திட்டவரைபொன்றினை நோக்கி இஸ்லாமிய அரசியல் இயக்கங்கள் நகரவேண்டும் என அவர் அழைப்பு விடுக்கிறார்.

## உசாத்துணைகள் :


Islam and Democracy – Prof. Tariq Ramadan , Research lecture , Berkley center for Religion, Peace , and World Affairs

Democracy and Shoorah - Prof . Tariq Ramadan ,Public lecture, ISNA annual conference , Chicago , America

Faith on Politics - Prof . Tariq Ramadan , Research lecture , London school of Economics and Political science

Secularism, Islam and Democracy - Prof . Tariq Ramadan , Research lecture , University of Gorge town , New York

Islam, Democracy , Civil society and the future of Muslim world - Prof . Tariq Ramadan , Research lecture , University of Messigna , America

European laws and Islamic values - Prof . Tariq Ramadan , Research lecture , Center for Islamic Legislature and Ethics , Doha ,Qatar American constitution and the Islamic values - - Prof . Tariq Ramadan , Research lecture , center for Islamic studies of north America

Civil state : ideas and challengers - Prof . Tariq Ramadan , Public lecture, Malaysia

Islamic Political Ethics in the de-colonial frame - Prof . Tariq Ramadan , Research lecture , Granada summer school lecture , Spain , 2014

Beyond Islamism - Prof . Tariq Ramadan , Article , www.tariqramdan .com

Is Islamism failed - Prof . Tariq Ramadan, Discussion , Aljazeera (English)


35ம் பக்கத் தொடர்

நபிலான கருமம் அப்போது கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டியதாக ஆகிவிடு கின்றது என்பதையும் ஹனபிகள் இதற்கான சான்றாகக் காட்டுகின்றனர். நேர்ச்சை என்பது சொல்லின் மூலம் அல்லாஹ்வுக்காக ஆக்கிக் கொள்ளப்பட்டதாகும். நபில் என்பது செயலின் மூலம் அல்லாஹ்வுக்காக ஆக்கிக் கொள்ளப்பட்ட கருமமாகும். ஆகவே சொல்லின் மூலம் அல்லாஹ்வுக்காக ஆக்கிக் கொள்ளப்பட்டதனை விட செயலின் மூலம் அல்லாஹ்வுக்காக ஆக்கிக் கொள்ளப்பட்டதே மேலானது என ஹனபிகள் விளக்குகின்றனர்.

இக்கருத்து வேறுபாட்டின அடியாக ஷாபிஇ சட்ட மரபின் படி விடுபட்ட நபிலான கருமங்களை மீட்ட வேண்டிய கட்டாயம் இல்லை. எனினும் ஹனபி மரபின் படி அப்படியான கருமங்கள் தவறினால் கட்டாயம் மீட்டப்படல் வேண்டும். இக் கருத்து வேறுபாடு பற்றிய மிகச் சுருக்கமான ஓர் குறிப்பையே இங்கு தந்தோம். இவ் விடயம் பற்றிய மிக விரிவான கருத்துக்களை இமாம் புகாரி தனது ''கஷ்புல் அஸ்ரார்'' எனும் நூலிலும் ஷெய்க் அல்- லக்னவி அல் அன்சாரி தனது 'பவாஇஸு"ர் ரஹ்மூத்'' எனும் நூலிலும் தந்துள்ளனர். எமது ஆய்வின் நோக்கம் கருதி சுருக்கிக் கொண்டோம். இக் கருத்துக்கள் இஸ்லாமிய பிக்ஹில் ''அல்- மன்தூப்'' எனும் பிரயோகம் பெறும் வகிபாகங்களைக் காட்டுகின்றன. அடுத்த இதழில் இன்னொரு பிரயோகம் பற்றி அறிய விழைவோம். இன்ஷா அல்லாஹ் (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமிய சிந்தனை பழைய பிரதிகளுக்கான விஷேட விலைக்கழிவு

இஸ்லாமிய சிந்தனை ஆய்வுச் சஞ்சிகை; முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய சிந்தனையை வளர்க்கும் நோக்கில் கடந்த மூன்று தசாப்தங்களுக்குமேலாக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. மிகத்தரமான முதன்மையான இஸ்லாமிய ஆய்வுச் சஞ்சிகை என்ற ஸ்தானத்தைப் பெற்ற இது- தொடர்ந்தும் தனது தரத்தைப் பேணி வருவதனை பல மட்டத்தினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். முஸ்லிம் உலகில் அரபு, உர்து, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவரும் இஸ்லாமிய சஞ்சிகைகளில் இடம்பெறும் முஸ்லிம் உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களது கட்டுரைகளை மொழிமாற்றம் செய்தும், இலங்கையின் தலைசிறந்த அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதிலும் விஷேட கவனம் செலுத்தி வருகின்றது.

காலத்தின் தேவை குறித்தும், உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களின் இஸ்லாம் பாடவிதானங்களுடன் தொடர்புடைய பல்வேறு கட்டுரைகளையும் நாம் பிரசுரித்து வந்துள்ளோம். அதிலும் குறிப்பாக கீழ்வரும் தலைப்புக்களிலும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளமையை இங்கு குறிப்பிடலாம்:

* அல்குர்ஆன் சிந்தனைகள்
* நபி (ஸல்) அவர்களது ஸீறா
* ஹதீஸ் விளக்கங்கள்
* இஸ்லாமிய வாழ்க்கை முறை
* பிக்ஹ் (இஸ்லாமிய சட்டங்கள்)
* வரலாறுகள்
* இஸ்லாமிய உலகு பற்றிய கண்ணோட்டங்கள்

எனவே, இலங்கையில் வெளிவரும் ஏக இஸ்லாமிய ஆய்வுச் சஞ்சிகை என்ற வகையிலும் தரமிக்க இஸ்லாமிய கலாபீடமொன்றின் வெளியீடு என்ற வகையிலும் இஸ்லாமிய சிந்தனை வாசகர்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றனர். எமது சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த வாசகர் வட்டத்துடன் இணைந்து பயன்பெற வேண்டுமென்பது இஸ்லாமிய சிந்தனையின் எதிர்பார்ப்பாகும்.

அந்தவகையில் எமது வெளியீட்டுப் பணியகத்தினால் வெளியிடப்பட்ட (1993 முதல் 2014வரையிலான) இஸ்லாமிய சிந்தனையின் 31 இதழ்கள் உள்ளன. அதனை நாம் விஷேட கழிவு விலையான ரூபா 1000.00வுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். தபால் செலவு ரூபா 250.00

பிரதிகளைப் பெற்றுக்கொள்ளவிரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு காசுக்கட்டளை (M.O)அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். **The Manager, Naleemiah Bureau of Islamic Publications. P.O.Box. 01, Beruwala,**

(தொடர்புகளுக்கு : **Mob: 0714427630**)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேரத்தை வீணாக்குவது மரணத்தை
விட கொடியதாகும். ஏனெனில், அது
அல்லாஹ்வுடனான உனது உறவையும்
மறுவுலகுடனான உனது உறவையும்
துண்டித்து விடுகிறது.
மரணமோ உலகுடனான உனது
உறவையும் உலக மக்களுடனான
உனது உறவையும்தான்
துண்டித்து விடுகிறது"

■ இமாம் இப்னுல் கையிம் (ரஹ்)

Published By: Naleemiyah Bureau of Islamic Publications, P.O.Box: 01, Beruwala, Sri Lanka.
Offset: A.J. Prints, No: 44, Station Road, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org